436

436
2-56
25

# பணத்தின் மாண்பு

ஆசிரியர் :
வித்துவான், பாலூர் து. கண்ணப்ப முதலியார்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 MAY 1956
MADR

X61
N55
109266

ரமணிய பிள்ளை
திருநெல்வேலி

# பணத்தின் மாண்பு


எழுதியவர்

வித்வான்-பாலூர் து. கண்ணப்ப முதலியார்,

தமிழ் விரிவுரையாளர்.

புதுக்கல்லூரி, சென்னை-14.



திருந்திய பதிப்பு

**எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை**

பப்ளிஷர்ஸ் : : திருநெல்வேலி

9, பிலிப்ஸ் தெரு, சென்னை-1

முதற் பதிப்பு — 1954
திருந்திய பதிப்பு — 1955

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 109846
MADRAS

விலை. 0-14-0

எஸ். பி. எஸ். பிரஸ், சென்னை-1

# முன்னுரை

தமிழ் மொழி தொன்று தொட்டு நல் ஆக்கம் பெற்று வந்துள்ளது. அவ்வாக்கம் மேலும்மேலும் வளர வேண்டுமானால் நம்மொழியில் நம் நாட்டு அறிஞர்களின் கருத்துக்களையும் மேனாட்டு அறிஞர்களின் கருத்துக்களையும் இணைத்துப் பல நூல்கள் வெளிவருதல் இன்றியமையாதது. அவ் வின்றியமையாமையைக் கருத்தில் கொண்டே பணத்தின் மாண்பு என்ற இந்நூலை யான் எழுதலானேன். இத்தகைய நூற்கள் தமிழ் மாணவர்களுக்குப் பயன் தரும் என்பது எனது துணிபு.

"அம்மை அப்பர் அகம்"
77, அவதானம் பாப்பையர் வீதி,
சென்னை-7. 1—11—54.

பா. து. க.

# உள்ளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | பணம் ஆக்குதல் | ... | 1 |
| 2. | பணப் பெருமை | ... | 6 |
| 3. | பணங்காத்தல் | ... | 12 |
| 4. | பணம் அழிவு | ... | 19 |
| 5. | பணம் தேடல் | ... | 24 |
| 6. | அவா | ... | 29 |
| 7. | நினைவு | ... | 34 |
| 8. | தன் முயற்சியும் கடமையும் | ... | 40 |
| 9. | அறிவு | ... | 48 |
| 10. | வினைசெய்யும் திறன் | ... | 56 |
| 11. | துணிவு | ... | 63 |
| 12. | துணைக் கோடல் | ... | 67 |
| 13. | பணிவுடன் நடத்தல் | ... | 73 |
| 14. | துணைத்தொழில் | ... | 77 |
| 15. | விளம்பரம் | ... | 80 |
| 16. | அரசாங்கம் | ... | 85 |
| 17. | இறுவாய் | ... | 90 |

## 1. பணம் – ஆக்குதல்

பணம் என்பது காசு, நோட்டு என்னும் இரண்டிற்கும் வழங்கப்படும் பொதுப்பெயர். ஆக்குதல் என்பது ஈட்டுதல் என்று பொருள்படும். எனவே, பணத்தை ஆக்குதல் என்பதற்குப் பணத்தை யீட்டி உண்டாக்குதல் என்பது பொருளாம். இதற்கு, நாணயம் செய்தலும் நோட்டு அச்சடித்தலும் என்று பொருள் செய்து விடுதல் கூடாது.

பொருளாதாரம் என்ற தொடர் சிலரால் எடுத்தாளப்படுகின்றமையால், அதன் பொருளையும் சிறிது சிந்திப்போமாக. 'பொருள்' என்பது, மனிதனால் ஆக்கப்பட்டு விலை கொடுத்து வாங்கத் தக்கனவாயுள்ள எண்ணத் தொலையாத காட்சிப் பொருள்கள் அனைத்தும் ஆகும். பணத்தையும் பொருள் என்கிறோம். பணமென்பது அப்பொருள்களை வாங்கக் கருவியாக இருப்பதும், அப்பொருள்களின் தோற்றத்திற்குத் தேவைப்படுவதுமான அரசியலார் நாணயங்களும் நோட்டுகளும் ஆகும். ஆதாரம் என்பது அடிப்படை, பற்றுக்கோடு, மூலகாரணம் என்றெல்லாம் பொருள் தரும் மொழியாகும். ஆகவே, பொருளாதாரம் என்பது பொருளின் தோற்றத்திற்கு மூல காரணமாய் இருப்பது என்பது பொருள். இதனை உதாரண முகத்தால் விளக்கினால், 'குடம்' என்ற ஒரு பொருள் ஆக்குதற்குக் குயவன், மண், தண்ணீர் தண்ட சக்கரம், குயவனது செயல், இடம், காலம் ஆகிய இவ்வளவும் ஆதாரங்களாய் இருப்பன

போன்றது. ஒவ்வொரு பொருளின் தோற்றத்திற்கும் பல ஆதாரங்கள் தேவைப்படுதலாலே, அவ்வாதாரங்களையும் உடன்கூட்டிப் பார்க்கின்ற முறையில் பொருளாதாரம் என்ற இத் தொடர் வழக்கில் வருவதாயிற்று. எனவே, பணத்தை ஆக்குதல் என்பதில் பொருளாக்கம், பொருளாதாரம் என்பவைகளும் பெரும்பாலும் அடங்கியுள்ளன என்பதையும் அறியவேண்டும்.

உலகில் மக்கள் இயங்குவதற்கும் இன்பம் நுகர்தற்கும் இன்றியமையாது வேண்டப்படுவது பணந்தான் என்பது எல்லாராலும் தெரிந்தறியப்பட்ட உண்மை ஆகும். ஆயினும், சிலர் இவ்வுண்மையை அறிந்துகொள்ளாமல் உள்ள பணத்தைப் பாழாக்கியும் பணத்தை வழிகள் தெரிந்து தேடுதல் செய்யாமலும் வாழ்க்கையில் நடைப்பிணங்களாக இருக்கிறார்கள். பணத்தின் அருமை பெருமை தெரிந்தவர்களுள் சிலர் அதைத் தேடுதற்கான வழிவகைகள் தெரியாமல், வினையின் மீது பழிபோட்டு அதனை நொந்துகொண்டிருக்கிறார்கள். வேறு சிலர் 'கொடுக்குந் தெய்வம் கூப்பிட்டுக் கொடுக்கும், நாமேன் வருந்துவது' என்று பேசிக்கொண்டு திரிகிறார்கள். மற்றும் சிலர் தம் பிறந்த நாட்குறிப்பில் (ஜாதகக் குறிப்பில்) நல்வினைப் பயன் எவ்வாறு இருக்கிறதென்றும், தமக்கு நல்ல காலம் எப்பொழுது வருமென்றும், எப்பொழுதும் ஜாதகங் கூறுவாரைத் தேடி அலைகிறார்கள். மற்றும் சிலர் குதிரைப் பந்தயம், போட்டிப் பந்தயம் போன்ற நெறியல்லா நெறிகளில் சென்று கெட்டழிகிறார்கள். இவைகளுக்கெல்லாம் காரணம் பணத்தின் தன்மையையும் அதை ஆக்க

வல்ல முறைகளையும் காக்கவல்ல வழிகளையும் இவர்க்ள் நன்குணராத குற்றமேயாகும்.

பள்ளிப் படிப்புகளெல்லாம் பற்பல துறைகளில் ஓரளவு அறிவைக் கொடுக்கின்றன. எனினும் அந்த அறிவை எப்படிப் பயன்படுத்திப் பணத்தை ஆக்கலாம் என்பதை அவை நமக்குத் தெளிவாய் எடுத்துக் காட்டுவதில்லை. பள்ளிப் படிப்பை முடித்தவுடன் பணந் தேடுவதற்கு என்ன வழி வகைகள் இருக்கின்றன என்பதைத் தனக்குத்தானே ஆராய்ந்து முடிவு கட்ட வேண்டிய நிலைமை ஒவ்வொரு மாணவனுக்கும் ஏற்படுகிறது. உலகியல் படிப்பு நிரம்பப் பெருத மக்கள், பெரும்பாலார் பணந் தேடத் தொடங்கித் தவருன துறைகளில் இறங்கித் தம்மறிவுக்கேற்ற, காலத்துக்கேற்ற, வாழ்க்கை வளத்திற்கேற்ற, சூழ்நிலைக்கேற்ற முற்போக்கடையாமலும் தக்க பணமாக்கல் செய்யாமலும் ஏமாந்துபோய், வாழ்க்கை நடத்த வேண்டிய அத்தியாவசியமான பணத்திற்கும் திண்டாடவேண்டிய நிலைமையில் வந்து சேருகிருர்கள்.

பலர், உயிர் வாழ்தற்கு உணவு கிடைத்தால் போதுமென்று வயிற்றுப் பிழைப்பிற்கு வழி தேடி விட்டுப் போதுமென்ற மனத்தோடு அமர்ந்து விடுகிருர்கள். அதற்குமேல் பணம்வேண்டி அவர் தம் அறிவை வேலை செய்ய விடுவதில்லை. சிற்சிலரே உலக இன்பத்தைநுகரப் பணம் மிகத் தேவையிருத்தலையுணர்ந்து அதை ஆக்குதல் செய்ய, தக்க வழிகள் கண்டுபிடித்து பணஞ்சேர்த்து இல்வாழ்க்கையை இன்பமாக்குகிருர்கள். நன்கு படித்தவர்களில் பலர் பள்ளி ஆசிரியர் வேலையையும் கணக்கப்பிள்ளை

வேலையையும் மேலெனக் கருத்திற்கொண்டு இவற்றி லொன்றிலமர்ந்து சொற்ப வருமானம் பெற்று வாழ்க்கை நடத்துவதோடு நின்று விடுகிறார்கள். அரைப்படிப்புக் கால்படிப்புக்காரர்கள், படிப்பே இல் லாதவர்களுள் சிலர், உத்தி உபாயங்களைக்கொண்டு நிரம்பப் பொருள் தேடிச் சிறப்படையக் காண்கிறோம். ஏனிந்த வேற்றுமை? "பெருமையும் சிறுமையும் தான்தர வருமே", "உள்ள முடைமை உடைமை", "ஏழையாயிருந்தோர் பல்லக்கேறுதல் கண்டிலீரோ" என்ற பழந்தமிழ்ச் சொற்றொடர்களை நாம் இவ்விடத் தில் எண்ணிப் பார்க்கவேண்டும்.

பல்லாண்டு பயின்று பெறும் பி. ஏ., எம். ஏ., முதலிய பட்டங்களுக்கு உரியவர்களுங்கூடப் பணந் தேடும் வழிவகைகளை உடனே எடுத்துக்கூற முடிவ தில்லை. இவர்களும் தமது நினைக்கும் ஆற்றலின் அளவாகவும், அல்லது மற்றொருவர் கூறும் சூழ்ச்சி யின் அளவாகவுந்தான் பணஞ் சேர்க்கும் ஒரு தொழி லைத் தொடங்க வேண்டியவர்களாய் இருக்கிறார்கள்.

செய்தித்தாளில் வெளிவரும் பொருளாதாரக் கருத்துக்கள், கட்டுரைகள் அவ்வளவும் ஆட்சிமுறை யில் சில திருத்தம் உண்டாகும் அளவுக்குத் துணை புரிவனவேயன்றிப் பொதுமக்களில் பெரும்பாலார்க் கும் உள்ள இப்பொருட் பிரச்னையைச் சரிக்கட்ட ஒரு சிறிதும் உதவுவனவாகக் காணோம். ஆகையினால், இனிப் பொது மக்களிடையே உள்ள பொருளாதாரக் குறைபாடுகளை நீக்கவல்ல வழிவகைகளைப்பற்றி ஏராளமான கட்டுரைகளையும் கருத்துக்களையும் அறிவாளிகள் அவ்வப்பொழுது செய்தித்தாள்களில் வெளியிடுதல் வேண்டும். மேடைப் பேச்சாளருங்

கூட இப்பொருளாக்கத்தில் உள்ள சிக்கல்களைப் பற்றிப் பொதுக் கூட்டங்களில் விளக்கமாகப் பேசுதல் வேண்டும். இவ்வாறு பொருளாக்க நுட்பங்களைப் பொதுமக்களிடையே பரப்பினுல்தான் பொதுமக்கள் எல்லாரும் தெளிவடைந்து அவரவர் நிலையை ஊக்கமாகவும் திருந்திய முறையிலும் மாற்றி யமைத்து உயர்வடைய முடியும். மக்கள் எல்லாரும் திருத்தமடைந்து முற்போக்கு மனப்பான்மையோடு தொழிலாற்ற முற்பட்டுவிட்டால், பின்பு அவர்கள் எல்லாரும் எளிதில் பணமாக்கல் செய்துவிடுவார்கள். அதன் பயனுக நாடு செழிப்பெய்தி அரசியலாருக்கும் பொருளாதாரத் துறையில் கவலைக்கிடமான கட்டங் கள் உண்டாவதற்கே இடமில்லாமல் போய்விடும். "குடியுயரக் கோனுயரும்" என்பது தானே நம் ஔவைப் பிராட்டியார் மொழி!

இன்று ஐரோப்பா, அமெரிக்கா முதலிய மேற்கு நாடுகள் செல்வத்தில் சிறந்து விளங்குகின்றன. அவற்றிற்குக் காரணம் அந்த நாட்டு அரசியலார் மட்டு மல்லர்; அந்த நாட்டு மக்களிடையே உள்ள முற்போக்கு மனப்பான்மையும், விடாமுயற்சியும், தொழிற் திறமையும், பணமாக்குதலைப் பற்றிய நுட்பங்களை நன்குணர்ந்திருத்தலும் பெரும்பாலான காரணமாகும். எனவே, நம்மவரிடையே உள்ள பல குறைகளைக் கூடுமான வரையில் நீக்கவும் சிறுவர் களின் அயர்ந்து கிடக்கும் அறிவுணர்ச்சியைத் தட்டி யெழுப்பி அவர்களை முன்கூட்டி யெச்சரிக்கவும் பண மாக்குதல் சார்பாய் என்னென்ன முறைகள் கையாள வேண்டுமென்பதை இங்கு ஒன்றன் பின்ஞென்ருக ஆராய்ந்து அறிந்து கொள்வோமாக.

## 2. பணப் பெருமை

மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் வாழ்க்கை நடாத்துதற்கும், பெருமையடைதற்கும், இன்பங்கள் நுகர்தற்கும், பணந்தான் முதன்மையாய் இருக்கிறது என்பது உலகறிந்த உண்மை. உலகுய்யுமாறு இவ்வுண்மையை விளக்கி நம்நாட்டுப் புலவர் பலர் பலவகையாய் அவரவர் காலத்தில் அழகிய பாடல்களாகப் பாடிச் சென்றுள்ளனர். ஆனால், அப் பாடல்கள் எல்லாம் பற்பல நூற்களில் சிதறி இலைமறை காய்போல் பண்டிதர்க்கே யன்றிப் பாமரர் கண்களில் எளிதில் எதிர்ப்படுவதில்லாமல் இருத்தலின், அவற்றுள் சிலவற்றையேனும் மக்கள் தெரிந்திருத்தல் உணர்ச்சிபெறும் அளவிற்கு நன்றெனக் கருதிச் சில பாடல்களை மட்டும் இங்கு உங்களுக்கு குறிப்பிடப்பட்டுள.

எந்தப் பொருள் வாங்கவேண்டுமானாலும் பணமில்லாமல் வாங்கமுடிகிறதா ? ஓர் ஊரைவிட்டு மற்றோர் ஊருக்குச் செல்வதானாலும் வண்டி முதலாளிக்குப் பணங் கொடுத்தால்தானே அவன் நம்மை நினைத்த ஊருக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பான் ? படிப்புப் பல படித்துப் பட்டம்பெற விரும்பினாலும், அதற்கு ஊக்கமும் உற்சாகமும் உள்ளத்தின் எழுச்சிமட்டும் இருந்தால் போதுமா ? நூல்களுக்காகவும் கல்லூரிச் சம்பளம் துணிமணி போன்ற செலவுகளுக்காகவும் பணமல்லவா முதன்மையாக வேண்டியிருக்கிறது ? வாணிபஞ் செய்வதானாலும்

ஒரு தொழில் நிலையம் அமைப்பதானாலும் இக் காலத்தில் எவ்வளவு பணம் வேண்டியிருக்கிறது! பணமில்லாமல் எது நடக்கிறது? குடும்பம் நடக் கிறதா? குழந்தை வளர்கிறதா? கல்வி நிலையங்கள் நடக்கின்றனவா? திருமணம் நடக்கிறதா? பிணச் சடங்கு நடக்கிறதா? இறைவழிபாடு நடக்கிறதா? மனித வழிபாடு நடக்கிறதா? அரசியல் நடக்கிறதா? உலகத்தில் பணமில்லாமல் எதுவும் நடப்பதில்லை. ஆகையினால்தான் பணத்தின் பெருமையை உணர்ந்த திருவள்ளுவர் பணமில்லாதவனுக்கு இவ்வுலகத்தில் இன்பம் இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்.

"அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளிலார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு"

இதன் பொருள், 'பொருள் இல்லாதவர்க்கு இவ்வுலக இன்ப வாழ்க்கை இல்லாதவாறுபோல, உயிர்களிடத் தில் அருளில்லாதவர்க்கு வீட்டுலகத்து வாழ்க்கை இல்லை' என்பதாம்.

"உலகத்தார்க்கு உறுதி பயப்பன என்று சொல் லப்படும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினுள், வீடென்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத் தாகலின், துறவற மாகிய காரண வகையால் கூறப்படுவதல்லது, இலக்கண வகையால் கூறப்படாமையின், நூல்களால் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம்," என்கிறார் பரிமேலழகர். இம் மூன்றனுள் நடுவணதாகிய பொருள் ஒருவனுக்குக் கிட்டிவிட்டால், முதற் கண் கூறப்பட்ட அறமும் இன் பமும் தடையின்றி நடைபெறும் என்றும், அது கிட் டாவிட்டால், கொல்லன் உலைக்களத்தில் போட்டுச் சுடுவது போன்ற துன்பம் அவனைப் பற்றிக்கொண்டு

வாட்டும் என்றும் பணப்பெருமையை மிக அழகாக எடுத்துக் கூறுகிறது நாலடி நானூறு. அஃது வருமாறு :

வடுவிலா வையத்து மன்னிய மூன்றின்
நடுவண தெய்த இருதலையும் எய்தும்;
நடுவண தெய்தாதான் எய்தும், உலைப்பெய்து
அடுவது போலும் துயர்.

'ஒருவன் கல்வியறிவு இல்லாத கயவனாக இருந்த போதிலும், மிகுந்த பணம் ஒன்று மட்டும் வைத்திருந்தால் போதும். அவனை எல்லாரும் தேடிச் செல்வர்; வரவேற்பர் ; புகழ்வர். கல்வி, அறிவு, அழகு முதலியன இருந்து பணம் ஒன்று இல்லாத ஏழையாக இருந்தால் மதிக்க வேண்டிய அவனது மனைவியும் அவனை மதிக்க மாட்டாள். அவன் வாய்ச்சொல் செல்லாக் காசாகிவிடும்' என்று கூறுகிறார் ஒளவை மூதாட்டியார். அஃது :-

கல்லானே யானாலும் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாரும் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லாத வன்வாயிற் சொல்.

என்பது.

சித்தர்களுள் ஒருவராகிய காக புசண்டர் என்பவர் தாம் செய்த "காக புசண்டர் நாடி" என்ற நூலில் பணப்பெருமையினைச் சிறப்பித்துக் கூறும் கீழ்வரும் ஓர் அழகான பாடல் காணப்படுகிறது.

உண்டுண்டு பொருளிருந்தா லெல்லா முண்டு
ஊருண்டு காடுண்டு மலைதா னுண்டு
தொண்டுண்டு தீபவொளி மேடை யுண்டு
சுடுகாடு போமளவு மேன்மை யுண்டு

தண்டுண்டு பொருளிலார்க் கென்ன உண்டு
சமத்தென்ன வாயென்ன சவுடா லென்ன
கண்டுண்டு கேட்பதென்ன தோணு தென்ன
கர்மமென்று சொல்லிடுத லெதனு லென்ன.

சரவணப் பெருமாள் கவிராயர் என்பவர் இப் பணப் பெருமையினை ஒரு பாட்டு இரு பாட்டிலல்லா மல் ஒரு நூலாகவே பாடிப் "பண விடு தூது" என்று பெயரிட்டிருக்கிறார். இந்நூல் மிக அழகாகப் பாடப் பட்டுப் பணப்பெருமையினை மிக விரிவாக எடுத்துக் கூறுகின்றது. இதில் வரும் சில சுவையான பகுதி களைப் படியுங்கள்.

பணமே எனைப்படைத்த பாக்கியவா னேவங்
கணமே என் ஆருயிரே கண்ணே—குண நிதியே

x x x x

ஈசனுனக் கொப்பென்பா ரீசனையுண் டாக்கி யவன்
பூசனை நீ செய்விப்பாய் புண்ணியா!

x x x x

மார்புதனி ல மாயோன் வரிசையாய் வைத்தது நின்
பேர்மகிமை கண்டாய் பெரியோனே — பாருலகில
ஆன்ற பல கோடி ஆன்மவர்க்கம் அத்தனையும்
ஈன்ற பிரமனும் நீ x x

எண்ணுன் கறம் வளர்த் திரட்சிக்கும் காந்திமதிப்
பெண்ணு ரமுது பிறந்ததலம் — அண்ணலே!

முந்திமய மான முழுச்சிமய வெற்பென்பார்
அந்தமலை யுன்றன் மயம் அல்லவோ? —எந்தையார்

முந்தப் பதஞ்சலிக்கு முன்னின்று கூத்தாடும்
அந்தக் கனகசபை யார் வடிவம்? நிந்தையிலா

உன்மரபு சொல்ல ஒருகோடி நாள்செல்லும்
என்மனத்தில் வந்த தியம்புவேன்—நன்மைதரும்

கோலம் பலவெடுத்துக் கோவேநீ செய்யும் இந்திர
சாலம் பிறரறியத் தக்கதோ—ஞாலமிசை

மேருஅணு வாக்கி விடுவாய் அணுவையொரு
பார மகமேருவெனப் பண்ணுவாய்—ஈரமின்றி

வெட்டுவாய் வெட்டுதலை மீட்பாய் வரிந்திறுகக்
கட்டுவாய் கட்டுங் கயிறவிழ்ப்பாய்—கிட்டும்

உறவிற் பகைவிளைப்பாய் உட்பகையாம் பண்டைக்
குறையைத் தவிர்த்துறவு கொள்வாய்—துறைவிட்டுக்

காடுநா டாக்குவாய் கண்விழித்து மூடுமுன்னே
நாடுகா டாக்குவாய் நம்பிநீ—தேடுங்கால்

தாங்குவா ரற்றுத் தடுமாறி ராப்பகலாய்
ஏங்குவார் ஏக்கமும் உன் ஏக்கமே—ஓங்கும்

பணம் என்னு உன்னைப் படைக்காத சென்மம்
பிணம் என்பர் கண்டாய் பெரியோய் இணையிலா !

x x x x

x x x x

தந்தரத்துக் கொவ்வாது தாழ்ந்தகுல மானலும்
வந்தெடுத்துப் பெண் கொடுக்கும் மாமனே.

x x x x

ஓதுகலைஞானம் உள்ளதெல்லாம் கற்று நன்ருச்
சாதிக்க வைக்கும் தகப்பனே—போதிக்கப்

போய்க்கொடிய கானம் புகுந்தாலும் அவ்வனத்தில்
வாய்க்கினிய சோறூட்டும் மாதாவே !

இவற்றை யெல்லாம் படிக்கும்போதும் பின் ஆழ்ந்து சிந்திக்கும் போதும், உலகில் பணத்திற்கு எவ்வளவு ஆற்றலும் பெருமையும் இருக்கின்றன என்பதும், நாம் அதைத் தேடவேண்டுவது எவ்வளவு இன்றியமையாததொரு கடமையாகும் என்பதும் யாருக்கும் தோன்ருமல் இரா.

உலகத்தில் தோட்டி முதல் தொண்டமான் ஈருக வுள்ள மக்கள் ஒவ்வொருவருக்கும் வாழ்க்கை நாடி யாய் உள்ளதும் பேரும் பெருமையும் தரத் தக்கதும் பணந்தான். வைர வைடூரியம், மரகதம் மாணிக்கம், பொன் வெள்ளி, நிலம் நீர், தோட்டம் துறவு, வீடு வாசல், வண்டி வாகனம், ஆடு மாடு, கன்று காலி முதலான அசையும் பொருள்களெல்லாம் பணத்தின் வேறு தோற்றங்களாய்ப் பணத்துளடங் கும். இக்கருத்தை வலியுறுத்தவே நம் முன்னோர் மாடு என்னும் சொல்லைப் பொன் என்னும் பொரு ளிலும் வழங்கி இருக்கின்றனர். ஆகவே, ஒவ்வொரு வரும் தெளிந்து முதலாவதாகப் பணத்தை மிக மிக மதித்தல் வேண்டும். பணத்தினிடத்தே முத லில் மதிப்புண்டானபோதுதான் அதை மிகுதியும் ஆக்கவேண்டுமென்ற அவா பிறக்கும். அதன்பின் ஆக்க வழிகளில் அடியெடுத்து வைக்கவும் மன முண்டாகும்.

## 3. பணங்காத்தல்

பணமாக்கும் வழிகளைத் தெரிந்துகொள்வதற்கு முன் ஒவ்வொருவரும் தன்னிடத்தில் உள்ள பணத்தை வீணில் செலவிடாமல், காப்பாற்றும் முறைகளைத் தெரிந்துகொள்ள வேண்டுவது மிகவும் முதன்மையான வேலையாகும். ஆக்கும் வழிதெரிந்து பொருளை மென்மேலும் ஈட்டிவிட்டுக் காக்கத்தெரியாத காரணத்தால் அதைக் கைநழுவவிட்டுக் கொண்டே ஒருவன் போவானாகில், அவன் வாழ்க்கையில் அடிக்கடி துன்பமடைந்து கொண்டேதான் இருப்பான். தொடர்ந்து இன்பங்காண மாட்டான்.

ஈட்டுகின்ற தொல்லை ஒருபுறமிருக்க, ஈட்டிய பணத்தைத் திறம்படச் செலவழிப்பதிலும் மிச்சப் படுத்துவதிலும்தான் மிகுந்த தொல்லைகள் இருக்கின்றன. மிகுந்த செலவுங் கூடாது. இன்றியமையாத செலவை அடியோடு சுருக்கிக்கொண்டு வெறும் உலோபனாக இருத்தலும் தகாது. ஈட்ட இயலாத முதுமைக் காலத்திலும், வாழ்க்கை துன்பமின்றி நடைபெறுவதற்கான பணத்தை முன்னெச்சரிக்கையோடு ஈட்டுங் காலத்திலேயே திங்கள் தோறும் கொஞ்சமாகச் சேமித்துவைத்தல் இன்றியமையாததல்லவா ?

பணத்தைச் சேமித்து வைப்பதற்காகப் பாங்குகள், பண்டு ஆபீஸ்கள், கோவாபரேடிவ் சொசைடிகள், (சேவிங்ஸ் பாங்குகள்) கவர்ன்மெண்ட் சேவிங்ஸ் சர்டிபிகேட்டுகள் முதலிய இடங்களும் வழி

களும் நமக்காக அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் நாம் விரும்பும் ஏதேனும் ஒன்றில், மிச்சப்படும் பணத்தைப் போட்டுச் சேமித்து வைத்தல் நலம். வாழ்க்கையின் பிற்பகுதியில் எதிர்பாராத செலவினங்கள் எண்ணிறந்தன வந்துவந்து முட்டும். அக்காலங்களில் சேமிப்புப் பணமே ஒருவருக்கு உற்ற துணையாகும். திடீரென்று பணம் வேண்டுமென்றால் இக்காலத்தில் யாரும் பணத்தை எளிதில் எடுத்துக் கொடுக்கமாட்டார்கள். ஒரு வேளைச் சிலர் கொடுத்தாலும் மிகுந்த வட்டிக்குத்தான் கடன் கொடுப்பர். அளவு மீறிய வட்டியிலேயே கடன் வாங்குபவர் பிறகு முதல் கொடுப்ப தெங்ஙனம்? கடனடைபடுவது எப்போது?

திருமணத்திற்கு முன் ஒருவன் தன் வருமானத்தில் திங்கள் தோறும் கொஞ்சம் மிச்சம் பிடித்துச் சேமித்துவைத்திருந்த தொகையைக்கொண்டு மணஞ் செய்து கொள்ளலே அறிவுடைமையாகும். அப்படியின்றிக் கடன்பட்டு மணஞ் செய்து கொண்டு, குடும்பத் தொல்லையோடு கடன் தொல்லையும் வைத்துக் கொண்டு இடர்ப்படுதல் அறிவுடைமையாகமாட்டாது. வாழ்க்கையில் இறங்குகிறவன் முதலில் தன் மனைவியைமட்டுந்தான் காப்பாற்ற வேண்டியவனாக இருக்கிறான். அவனுக்குக் குடும்பச் செலவுகள் நிரம்ப இருப்பதில்லை. அந்தக் காலங்களில் அவன் வீண் பெருமைகளில் ஈடுபடாமல் தனக்கு வருகிற வருமானத்தில் பெரும் பகுதியை மிச்சப்படுத்தி வைக்க மறந்து போகக்கூடாது. ஆண்டுகள் செல்லச்செல்ல மக்கட் செல்வம் கூடவே பெருகிக்கொண்டு போகக் கூடும் அல்லவா? அப்பொழுதெல்லாம் மிச்சப்படுவது

என்ற பேச்சே பேச முடியாது. நீக்க முடியாத செலவுகள் வந்து சூழ்ந்துகொண்டு வாட்டும். அப்போதுதான் அவன் திகைக்க நேரிடும். ஆகையினுல், இளமையில் செலவுகளைக் கட்டுப் படுத்தி, மிச்சத்தைச் சேமித்து வைத்திருந்தால் அச் சேமிப்புப் பணம் அவனுக்குத் தொல்லைவருங் காலங்களில் துணைபுரியும் அல்லவா ?

உயிர்களில் சிறிய உயிராகிய எறும்புகளை நோக்குங்கள். அவை, மழைக் காலத்திற்கு வேண்டிய உணவை, வேனிற் காலத்திலேயே தம் புற்றில் கொண்டுபோய் வைத்துக்கொண்டு மழைக்காலத்தை வருத்தமின்றி இன்பமாகக் கழிக்கின்றனவே ! அப்படியிருக்க ஆறறிவுடைய மக்கட்பிறவி பெற்றுள்ள மாந்தர்கள் தங்கள் எதிர்கால வாழ்க்கையை எண்ணிப் பணத்தைக் காத்துச் சேமித்து வைத்தலில் தப்பென்ன இருக்கிறது ?

" செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும் "

இதன் பொருள், 'ஒருவன் தான் எண்ணிய வினைகளுள் செய்தக்கன அல்லவற்றைச் செய்வானுயினும், அல்லது தன்னுல் செய்யக்கூடிய செயல்களை எண்ணிச் செய்யாது விடுவானுயினும், அவன் கெடுவான் என்பது.

" இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு "

இதன் பொருள், 'ஒருவன் தனக்குப் பொருள்கள் வருகின்ற வழிகளை மேலும் மேலும் உண்டாக்குதலும், அப்படி உண்டாக்குவதால் வந்த பொருள்களை ஒரு வழிச் சேர்த்து வைத்தலும், சேர்த்த பொருள்

களைப் பிறர் கவர்ந்து செல்லாமல் காத்தலும், காத்தனவாகிய பொருள்களை அறம், பொருள், இன்பங்களாகிய மூன்றின் பொருட்டுச் செலவழித்தலும் ஆகிய இவ்வகைத் தகுதிகளைச் செய்ய வல்லனாய் இருத்தல் வேண்டும்' என்பது.

இக்குறட்பாக்கள் பொருள் ஈட்ட நோக்க முள்ளார்க்கு நல்ல அறிவுரைகளாகும். மாணவர்கள் இக்குறட் கருத்துக்களை நன்கு நினைவில் வைக்க வேண்டும்.

ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் கட்டாயம் ஒரு சேமிப்புத் திட்டம் இருந்தாகவேண்டும். குடும்பத்தில் திங்கள் தோறும் வரும் வரவு எவ்வளவு என்பதையும் ஏற்படும் செலவு எவ்வளவு என்பதையும் காட்டும் ஒரு குடும்பப் பட்டியலைப் போட்டுப் பார்த்து வேறுபாட்டைக் கண்டறிய வேண்டும். குடும்பத்தை நடத்தும் பொறுப்பு வாய்ந்த தலைவன் வரவைவிடச் செலவு குறைவாக இருந்தால் வரவில் மிச்சப்படும் தொகையை உடனே சேமிப்பிற்கென ஒதுக்கிவிட வேண்டும். அந்தச் சேமிப்பு, திங்கள் தோறும் வளர்ந்துகொண்டே போய்ப் பல ஆண்டுகளுக்குப் பிறகு, ஒரு மதித்தற்குரிய தொகையாக ஆகிவிடும். அந்தத் தொகையைக் கொண்டு அவன் குடும்பத்திலுள்ள பல குறைகளைக் கடன் படாமல் நீக்கிக் கொள்ளலாமல்லவா? எதிர்பாராத வகையில் ஏற்படும் நோய் நொடிகளுக்காக அதைச் செலவிடலாம், பிள்ளைகளின் மேல் படிப்பிற்குப் பயன்படுத்தலாம், குடியிருக்க ஒரு வீடு வாங்கப் பயன்படுத்தலாம், ஒரு தொழிலுக்கு முதற் பொருளாக்கி மேலும் பண மீட்டலாம், தள்ளாத காலத்தில் தனக் குறுதுணையாக்கிக்

கொள்ளலாம். தன் பிள்ளைகளுக்கும், தன் பேரப் பிள்ளைகளுக்கும் உதவும்படி ஆவன செய்யலாம். இப்படியே, இன்னும் பற்பல நல்ல வழிகளில் அத் தொகையை ஈடுபடுத்தி ஒவ்வொருவரும் தம் வாழ்க்கை நிலையை உயர்த்தலாம்; இன்புறலாம். ஒருவேளை, வரவைவிடச் செலவு மிகுதியாக இருந் தால்உடனே எந்தெந்தச் செலவைக் கட்டுப்படுத்திக் குறைக்கக் கூடும் என்று அவன் எண்ணிப் பார்த்து அந்தந்தச் செலவைக் குறைத்து வேருெரு புதுப் பட்டியல் அமைத்துக்கொண்டு அதன்படி மிச்சப்படும் தொகையை விடாப்பிடியாகச் சேமிப்பிற்கென ஒதுக்கி வரவேண்டும்.

புதுப்புதுப் பழக்கங்கள் மெல்ல மெல்ல வந்து நிறைந்துவிட்ட காரணத்தால், இக்காலத்தில் ஏராள மாகச் செலவழிக்கும் பழக்கம் பெரும்பாலாருக்கும் இயற்கையாகி விட்டது. இப்பழக்கமே பல குடும்பங் களில் பணமாக்குதலுக்குத் தேவையான சேமிப்புத் திட்டத்திற்குத் தடையாகவும் நிற்கிறது. ஆகையிஞல் இப்போதைய பொருளாதாரச் சூழ்நிலையில் வருவாயை வளர்க்க ஆற்றலில்லாதவர்கள் தங்கள் செலவைச் சிக்கனப் படுத்தாமல் வாழ்க்கை நிலையை உயர்த்திக்கொள்ள ஒருபோதும் முடியாது. இன்றி யமையாத செலவுகளை உண்மையில் யாரும் கட்டுப் படுத்த வேண்டியதில்லை. ஆனல், பல வீண் பெருமை யானசெலவுகளைக் கருத்துவைத்தால் திண்ணமாய், ஓரளவு கட்டுப்படுத்த வியலும். குறைந்த வருமான முள்ள மக்கள் தங்கள் வீண் பெருமை தரத்தக்க செலவுகளைக் கட்டுப்படுத்த வேண்டும். ஆகவே, ஓர் அளவிற்கு ஆரவாரச் செலவுகளைக் குறைத்தால் அல்லது நிறுத்தியே விட்டாலுங்கூட

எக்குடி மூழ்கிப் போய்விடும்? ஒரு குடியும் மூழ்கிப் போய்விடாது. உண்மையில் பல குடும்பங்கள் சீர் பட்டுத் தலை தூக்கும். ஒரு மனிதன் எவ்வளவுக் கெவ்வளவு தீய பழக்கங்களை வேண்டாவென்று உதறித் தள்ளுகிருனே, அவ்வளவுக்கவ்வளவு அவன் பணஞ் சேர்க்க முடியும்; செல்வவானுக முடியும். வாழ்க்கையில் சந்தோஷமாகவும் தேக ஆரோக்கியத் துடனும் வாழக்கூடும். பலருக்கு இருக்கும் அடிக்கடி சினிமாப் பார்த்தல் போன்ற தீய பழக்கங்கள் காரண மாக ஒவ்வொருநாளும், ஒவ்வொரு திங்களும், ஒவ்வோர் ஆண்டும்—ஏன் வாழ்நாள் முழுவதுங் கூட—எவ்வளவோ பணம் வீணுக்கப்படுகின்றது.

போதிய வருமானம் வந்து எல்லாச் செலவுகளை யும் சரிக்கட்டக்கூடிய ஆற்றல் வாய்ந்தவர்களுக்கு இச் சேமிப்புத் திட்டத்தைக் கூற நான் முன்வர வில்லை. குறைந்த வருமானம்பெறும் மக்கள், ஏன் இவ்வகைத் தீய பழக்கங்களை விடாப் பிடியாய்க் கட்டிக்கொண்டு இடர்ப்படவேண்டும்? வருமானம் போதாமல் ஏன் கடன் வாங்கவேண்டும்? வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் ஏன் திகைக்க வேண்டும்? இவ்வாறே இன்னும் ஏன் பல தொல்லைகளை அடையவேண்டும்? எனவே ஏழை மக்கள் ஒவ்வொருவரும் இவ்வகைத் தீய பழக்கங்களை விட்டு விட்டுச் சேமிப்புத் திட்டத்தில் சிறிது கருத்துச் செலுத்திஞல் அவர்கள் வாழ்க்கை —ஏன் அவர்களது மக்கள் வாழ்வும் உயர்ந்து வளம்பட வழி ஏற்படும் அல்லவா?

இதற்கு அரசாங்கமும், அறிஞர்களும் மக்களுக் குச் சேமிப்புத் திட்ட நன்மைகளை அடிக்கடி எடுத்துச்

சொல்லி வருகிறுர்கள். சேமிப்புச் செய்வதால். நாட்டு மக்கள் மேன்மையடைவர். நாடும் பொருளாதாரத் துறையில் சிறந்துவிளங்கும்.

> "பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைக்கும்
> கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்
> காவிதான் போயினபின் யாரே அனுபவிப்பர்
> பாவிகாள் அந்தப் பணம்"

இப்படி ஒரு பாட்டிருக்கிறது நல்வழி என்ற தமிழ் நூலில். பணங்காத்தலின் இன்றியமையாமையைக் கருதித்தான், பாங்கு முதலியவை இல்லாத காரணத்தால், பணத்தைப் பானையில் போட்டுப் புதைத்து வைத்தார்கள் பண்டைக்கால மக்கள். அப்படி வைத்தவர்களுக்கு அறிவுறுத்தும் வகையில் இந்தப் பாட்டு எழுந்திருக்கிறதே யொழியப் பணத்தைப் பாடுபட்டுத் தேடக்கூடாது என்ரூே, அல்லது தேடிய பணத்தைத் தமக்கும் தமது குடும்பத்தாருக்கும் எளிதில் பயன்படும் அளவில் சேமித்து வைக்கக் கூடாது என்ரூே இது மறுத்துக் கூறவில்லை. எனவே, மக்கள் தாம் தேடிய பணத்தை ஒன்று தாமாவது துய்க்க வேண்டும். அல்லது அதைத் தமது குடும்பத்தினராவது துய்க்க வழி செய்ய வேண்டும்.

---

## 4. பணம் அழிவு

கல்வி கேள்வியும், உள்ளத் தெளிவும், நல்லார் பழக்கமும் இல்லாமையால் மக்கள் பலர் பலகெட்ட குணங்கட்கு எளிதில் அடிமைகளாகித் தம்மரும் பொருளை விழலுக் கிரைத்த நீர் போல் வீண்செலவு களில் பாழ்படுத்தி வாழ்க்கையின் பிற்பகுதியில்-ஏன் முற்பகுதியிலுங் கூட பெருத்த ஏமாற்றமடைந்து வருந்தித் தவிக்கிருர்கள்; தம் அருமந்த பிள்ளைகளை யும் வருங்காலத்தில் நல்வாழ்வு வாழஒட்டாமல் தவிக்க விடுகிருர்கள். ஆகையினல், அவர்கள் தெளிவடை யும் பொருட்டு எவ்வெவர் எவ்வெவ் வகையில் பணத்தை அழிக்கிருர்கள் என்பனவற்றுள் சிலவற் றைக் கவனிப்போம்.

உறவினரை நம்பி அவரிடம் தம் உடைமை யெல்லாம் ஒப்படைத்து தக்க வயது நிரம்பப்பெருத தம் குழந்தைகளைப் பாதுகாக்கும்படி விட்டு ஒருவர் இறந்துபோக உறவினர் உடைமைக்குரிய சிறுவர் களை ஏமாற்ற - உடைமைக்குரியவர் பின்னர் வழக்குத் தொடர - நம்பினவர் பணம் கோர்ட்டுச் செலவுகளில் அழிந்த இடங்கள் எத்தனை? ஆகையினல் உறவினர் தம்மிடம் இறந்தவர் எவ்வளவு நம்பிக்கை கொண் டுள்ளார் என்பதைச் சிந்தித்து அவரது உடமைக்கு அழிவு செய்யாதிருப்பது நன்மையாகும்.

உள்ள உடைமையை ஒழுங்காகப் பங்கிட்டுக் கொள்ளாமல் பூசலிட்டுக் கொண்டு வழக்குகளில்

இறங்கிக் கோர்ட்டுக்கும் வக்கீலுக்கும் கொட்டிக் கொடுக்கிறவர்கள் பலர். ஆதலின் பங்காளிகளா யிருப்பவர்களுக்குத் தெளிந்த அறிவும் சிறிதளவு விட்டுக் கொடுக்கும் உள்ளமும் உண்டாக வேண்டும். நம்மவருக்குள் இந்த நற்குணங்கள் வளருமாயின், கோர்ட்டுக்கு அழிக்கப்படும் அவ்வளவு பணமும் அழியாது மிச்சமாகுமே.

காது குத்தல், கலியாணம், சீமந்தம் முதலிய பழக்க வழக்கங்களைக் கைவிட முடியாமல், கைப் பொருள்களைக் கொண்டும், கடன்பட்டும் தங்களது தகுதிக்கு மப்பால் ஏராளமான் பணத்தைச் செலவழித் தொழித்துவிட்டவர்களுக்கு நம் நாட்டில் கணக்கே யில்லை. பிற நாட்டவர்களைப் பார்த்தேனும் இந்த பழக்க வழக்கங்களுக்குக் கூடுமானவரைக்கும், முற்றுப் புள்ளி வைத்தாக வேண்டும். அப்பொழுதுதான் செல்வமுடையவர்களின் செல்வம் குறையாது. ஏழை களின் எண்ணிக்கை ஏருது.

குதிரைமேற் பற்று, கோழிமேற் பற்று, சினிமாப் பழக்கம் என்று பல வழிகளிலெல்லாம் இறங்கித் தம் மூதாதையர்களின் அரிய உடைமைகளை அழித் தும், வரவுக்கு மிஞ்சிய செலவு செய்தும் கெட்டுக் கொண்டு வருகிறவர்கள் எத்தனை பேர்? நாட்டில் பட்டினியால் பலர் வாடும்போது, நோய் நீக்கத்திற்கு மருந்து வாங்கக் காசின்றிச் சிலர் கலங்கும்போது, படிக்கப் பணமின்றிப் பல மாணவர்கள் ஏங்கும் போது பணம் படைத்தவர்கள் பல வழிகளில் பணத்தை அழிப்பதழகாகுமோ? நம் மக்கள் நன்கு எண்ணிப் பார்க்க வேண்டும். செல்வர்களுக்குச் சிறிது பொழுதுபோக்கு வேண்டுமென்ருல், தம்மினத்

தவராகிய ஏழை எளியவர்களுக்கும் சிறிது ஏற்ற மளித்துக் கண் குளிரக் கூடாதா? அப்படிச் செய்வ தனுல் பல இடங்களில் தாழ்ந்து கிடக்கும் மக்கட் கூட்டம் கொஞ்சங் கொஞ்சமாகத் தலே தூக்குமே. அதனுல் நாட்டிற்கும் மேன்மை உண்டாகுமே.

குடியிலுஞ் சூதிலும் இறங்கிக் குடும்பத்தைக் கெடுத்தவர்களேப் பற்றி எல்லாரும் நன்ருக அறிவர். நாட்டு மக்களின் பண அழிவுக்குக் குடியே பெருங் காரணமாகிறது. ஆதலின் அதை ஒழித்துவிட வேண்டு மென்ற நல்லெண்ணத்தோடுதான் மது விலக்குச் சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனுல், இச்சட்டம் வந்த பிறகும் அரசாங்கத்தினர் அறியாது சாராயம் விற்கிறவர்கள் பெருகிக் குடிக்கிற வழக்கம் இன்னும் பலருக்குள் இருந்துகொண்டுதான் வரு கிறது. இவ்வண்ணமே சூதாட்டமும் கூடாதென்ற சட்டமிருந்த போதிலும் அது குதிரைப் பந்தயம் போன்ற வேறு பல பெயர்களே வைத்துக்கொண்டு நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்துகொண்டுதான் வருகிறது. எனவே இவை களேயும் இவை போன்ற கெட்ட பழக்கங்களேயும் ஒழிப்பதற்குச் சட்டம் மட்டும் போதாது. மக்கள் தம் குற்றத்தைத் தாமாகவே உணர்கின்ற அளவுக்கு அறிவு பெற வேண்டும். மக்களிடையே அதன் கெடுதல்களே அடிக்கடி எடுத்துச் சொல்லி வர வேண்டும்.

எனவே, ஒருவரும் இப்படிப்பட்ட கெட்ட பழக் கங்களாகிய தீய வழிகளில் ஒரு போதும் கால் வழுக்கி வீழ்ந்துவிடக் கூடாது. ஒருவேளே முன்னரே ஒருவர் வீழ்ந்து விட்டிருந்தாலும், உடனே நன்கு எண்ணிப்

பார்த்துத் தகுந்த நீக்கம் அல்லது திருத்தம் எதுவோ, அதைச் செய்து அவரைத் திருத்த ஒவ்வொருவரும் முயலவேண்டும். இது மக்களது முக்கிய கடமையாகும்.

பலர் தங்களது எதிர்காலத்தைப் பற்றிச் சிறிதும் எண்ணிப் பார்ப்பதே யில்லை. நிகழ்காலத்திய வருமானமும் நிகழ்காலத்தில் உள்ள கையிருப்பும் நிகழ்காலத்திய செலவுகளுக்குப் போதுமானதாயும் இருந்து, அதன் காரணமாக நிகழ் காலத்திய வாழ்க்கை தாராளமாக நடக்கலாம் சிலருக்கு. இப்படிப்பட்டவர்கள் இந்தக் காலங்களிலெல்லாம் பணத்தை ஆரவாரச் செலவுகளில் அழித்துவிடக் கூடாது. எல்லாக் காலத்திலும் எல்லாருக்கும் சூழ்நிலை ஒரே அளவில் இருப்பதில்லை.

இன்றைய சூழ்நிலை நாளைக்கு மாறிவிடும். சென்ற திங்களில் இருந்த நிலை, இந்தத் திங்களில் இருக்காது. இவ்வாண்டின் வரவிற்கும் அடுத்த ஆண்டு வரவினங்களுக்கும் செலவுகளுக்கும் நீண்ட வேற்றுமை இருக்கத்தான் செய்யும், இப்படியே பார்த்தால் பத்துப் பதினைந்து அல்லது இருபது ஆண்டுகளுக்குப் பிறகு ஒருவருடைய நிலைமை அடியோடு மாறி இருக்கும். இஃது உலகியற்கை. இவ் வுண்மையை ஒவ்வொருவரும் உணர்ந்திருக்க வேண்டும். நமக்கு நல்ல வருமானம் இருக்கும்போது, பணத்தை வீணில் செலவிட்டுவிடாமல் சேமித்து வைப்பதுதான் அறிவுடைமையாகும். அறிவாளிகளா யிருப்பவர்கள் நிகழ்காலத்திலெல்லாம் வாழ்க்கைத் திட்டம் அமைத்துக்கொண்டு வாழ்வதோடமையாமல் எதிர் காலத்திற்கும் குறைந்தது, வரப் போகும்

இருபத்தைந்து ஆண்டுகள் வரையிலும் திட்டம் தீட்டிக்கொண்டு பண அழிவுக்கு அணுவளவும் இடமின்றித் தம் வாழ்க்கையைப் பிழையின்றி நடத்துவர். இவற்றை யெல்லாம் கருதித்தான் நம் திருவள்ளுவ நாயனாரும் கீழ்க்கண்ட அரிய குறளை நமக்குச் சொல்லியுள்ளார் போன்று தோன்றுகிறது.

> ஒத்த தறிவான் உயிர்வாழ்வான்; மற்றையான்
> செத்தாருள் வைக்கப்படும்.

இதன் பொருள், 'எவனொருவன் உலக நடையினை யறிந்து ஒப்புரவாகிய அறத்தினைச் செய்கிறானோ, அவனே உயிரோடு கூடி வாழ்கின்ற உடலுடையான் ஆவான். அவ்வறத்தினைச் செய்யாதவன் உயிரோடு கூடியிருப்பவனாயினும், செத்தவர்களுள்ளே ஒருவனாக எண்ணப்படுவான்,' என்பது.

---

# 5. பணம் தேடல்

"பணத்தைத் தேடவல்ல ஆற்றல்கள் நம்முள் யாவருக்கும் இல்லாமலில்லை. ஒவ்வொருவருக்கும் இஃதோரளவு இருந்துகொண்டுதான் வருகிறது. ஆனால் ஒரு சிலர் இந்நுட்பத்தை யறிந்து பணமாக் குதலைப் பற்றி எண்ணுவதும், அதை யொட்டிய ஆற்றலை வளர்த்தும், அப்படி வளர்த்த ஆற்றலைத் தக்க இடங்களில் எடுத்தாள்வதும் செய்யாமல், தாழ்வு மனப்பான்மையி லழுந்தி நல்ல வாய்ப்புக்களை எல்லாம் நழுவ விட்டுவிட்டு முதுமையில் பொரு ளின்மை காரணமாகப் பெரிதும் வருந்துகிறார்கள். இதுதான் நம்மவர் செய்யும் மிகப்பெரிய குற்றமாகும். இக்குற்றத்தை ஒவ்வொருவரும் அடியோடு களைதல் வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் ஆற்றல் பயன் தரும்; வாழ்க்கை வளம்படும். இல்லையேல் அவர்கள் சீரழிந்து போவார்கள் என்ற கருத்துக்கள் எல்லாம்படத் திருவள்ளுவர் திருவாய் மலர்ந்தருளிய ஒரு திருக்குறளைப் பாருங்கள்.

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

இதன்பொருள், 'ஒருவன் தன்னிடத்தே குற்றம் வருவதாகக் காண்பானாயின், அதற்கு முன்னரே அது வாராவண்ணம் காத்துக்கொள்ளல் வேண்டும். அவ்வாறு காத்துக்கொள்ளாவிடில், குற்றம் தன்னி டத்து வந்தபோது தீயினிடத்தே அகப்பட்ட வைக் கோல் எவ்வாறு அழிந்து போகுமோ, அவ்வாறு

அவனுடைய வாழ்க்கையானது அழிந்துபோகும். என்பதாம்.

எனவே, ஒவ்வொருவரும் முதலில் தாழ்வு மனப் பான்மையை யகற்றல்வேண்டும். " நமக்கு இயற்கை யில் பல ஆற்றல்கள் உண்டு ". " நினைத்தால், முயன் ருல், பழகினுல், நம்மாலும் பல ஆக்க வேலைகளைச் செய்ய முடியும் " என்ற துணிவும் முற்போக்குணர்ச் சியும் பெற்றுப் பணம் திரட்ட வல்ல வழிகள் என் னென்ன வென்பதை ஆராய்ந்து அறிதல் வேண்டும். இவ்வண்ணம் ஆராய முற்படுவோருக்கு உணர்ச்சி யறிவு ஊட்டி உறுதுணை புரியக்கூடிய படிப்பினை களிற் சிலவே மேல்வரும் இயல்களில் கூறப்பட்டுள் ளன. அவற்றை எல்லாம் மாணவர்கள் நன்கறிந்து நினைவில் வைத்துக்கொண்டு வருங்காலத்தில் ஆக்க வேலையில் முற்படுதல்வேண்டும்.

உலகில், பணம் ஈட்டுவதற்கென நடை பெறும் தொழில்களனைத்தையும் பொதுவாக இரண்டு வகையாகப் பிரிக்கலாம். தான் கற்ற கல்வியின் அள விற்குத் தகுந்தவாறு ஒருவர் மற்ருெருவரிடத்தில் பணிசெய்து பணமாக்குவது ஒருவகை. இது முதல் வேண்டாத் தொழில். இத்தொழிலில் சில பெரிய வேலைகளில் உள்ளவர்கள் தவிர, மற்றையோர் குடும்பம் நடத்தற்குத் தகுந்த பணம் தேட முடியுமே யொழிய, மிகுந்த பணத்தைத் திரட்ட வியலாது. மற்ருென்று முதல் வேண்டும் தொழில். எப்படி ஒரு குடியானவனுக்கு ஏராளமான விளைவு உண்டுபண்ண முதலில் ஓரளவு வித்தாகிய முதல் நெல் வேண்டி இருக்கிறதோ, அதுபோலப் பணப் பெருக்கஞ்செய்ய விரும்புவோருக்கும் முதலில் ஓரளவு பணம் வேண்டி யிருக்கிறது.

தன்னை வளர்க்கின்றவன் தந்த எரு, தண்ணீர், உழைப்பு முதலியவற்றின் தன்மையின் அளவாய் நெற் பயிர் வளர்ந்து எவ்வாறு ஏராளமான நெல்லைத் தருகின்றதோ, அதுபோல முதலாகப் போட்ட பண மும், போட்டவர் அறிவுத்தன்மை, முயற்சி, திறமை முதலியவற்றின் அளவாய் அகன்று வளர்ந்து ஒன்று பலவாகப் பெருகிக் குவியும். எனவே, பணமிருப்பவர் கள் தம்மிடமுள்ள பணத்தைப் பெட்டியில் போட்டுத் தூங்க வைக்காமல், அதை எப்படிப் பயன்படுத்தி வளரச் செய்வதென்பதை ஆழ்ந்து எண்ணிப்பார்த்து முற்போக்குணர்ச்சியுடன் ஆக்கவேலையில் பொருள் திரட்டலே மிகச் சிறந்ததாகும்.

பொதுவாகக் கடன் வாங்குவது ஒரு கெட்ட பழக்கம் என்று சொல்லப்பட்டாலும் பயிர்த் தொழில், வாணிபம், கைத்தொழில் ஆகியவற்றைப் பொருத்த மட்டில் கடன் வாங்காமல் கையிலுள்ள முதற் பொருளை மட்டும் எதிர்ப்பார்த்து நடக்கமுடியாது. தாங்கக்கூடிய அளவில் வட்டிக்குக் கடன் வாங்கித் தான் பணத்தைப் போட்டுத் திருப்ப வேண்டும். நாம் மேற்கொண்ட தொழிலில் இந்நுட்பத்தை மறந்து விடாது பணத்தைப் பெருக்க முயல வேண்டும்.

உடைமைகளின்மேல் கடன் கொடுத்து வட்டி வாங்குதல், வாணிபப் பொருள்களைச் செய்து விற்றுப் பணமீட்டல், இயந்திர நிலையங்கள், கைத்தொழில் நிலையங்கள் அமைத்துத் தொழில் செய்து தகுந்த ஊதிய மடைதல், பெரிய தொழில் நிலையங் களில் பங்குதாரர்களாகி வருவாயில் பங்கு பெறுதல் முதலிய செய்கைகள் ஒன்றனுள் இறங்கிப் பணத்

தைப் பெருக்கிக்கொண்டே இருக்கவேண்டும். பணத்தின் தன்மை தெரியாதவர்களும், பேதைகளும், கோழைகளுமே உள்ள பணத்தைப் பெட்டியில் பூட்டி வைத்துக்கொண்டு "பண்டை விதியின் பயன்" என்று இருப்பார்கள். அங்ஙனமிராமல் தகுந்த வண்ணம் ஆராய்ந்து பயன்தரக்கூடிய ஒரு நல்ல செய்கையில் இறங்கி உள்ள பணத்தைப் பெருக்கிக் கொண்டு இருப்பதே அறிவுள்ளவர்களுடைய செயலாகும்.

இனி "உடையது விளம்பேல்" என்று ஆத்தி சூடியில் கூறப்பட்டுள்ளதற்கிணங்கப் பணமாக்கும் நோக்கமுள்ளவர்கள் தாம் பணமாக்குதலை ஒட்டி என்னென்ன ஆராய்ச்சி செய்து வருகிறார்கள் என்பதையும், எவ்வளவு பணம் ஈட்ட திட்டம் வைத்துள்ளார்கள் என்பதையும், என்னென்ன முறைகளைக் கையாளுகிறார்கள் என்பதையும் பிறரறிய விளம்பரப் படுத்தி விடக்கூடாது. கூடுமானவரையில் தம் செயல்களை ஒரு குறித்த காலவரையறைக்கு மறைவாக வைத்திருக்கவேண்டும். இல்லையேல் அழுக்காறுடைய ஊரார், உறவினர், நண்பர், நண்பரல்லாதார் முதலாயினோர் பொறாமை மிகுதியால் தங்கள் செயலுக்கு உடனே ஊறுவிளைவித்துச் செயலை அடியோடு கெடுத்துவிடக் கூடும். இதே கருத்தை நம் வள்ளுவரும் கூறியுள்ளார்.

> "கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை; இடைக்கொட்கின்
> எற்றா விழுமந் தரும்"

இதன்பொருள், 'செய்யப்படும் வினையை முடிவின் கண் புலப்படும்வரை முன்னெல்லாம் மறைத்துச் செய்வதே வினை முடிப்பானுக்கு வேண்டுவதாய

மனவலியாகும். அங்ஙனமின்றி இடையே புலப்படு மாயின், அப்புலப்பாடு செய்வானுக்கு நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்.' என்பதாம்.

மேற்குறித்த வண்ணம் அறவழிகளினுல் பணத்தை ஆக்குதலே சிறந்த வகையாக இருக்கும் போது சிலர் அறனல்லாத தீய வழிகளில் பணத் தைத் திரட்ட முயல்கின்றதையும் நாம் உலகில் காண் கிறோம். மக்கள் அவ்வாறெல்லாம் தீய வழிகளில் தம் ஆற்றலைப் பயன்படுத்தக் கூடவேகூடாது. தீய வழி களை விலக்க வேண்டுமாஞல், எவை எவை தீய வழி கள் என்பதை அவர்கள் தெரிந்த பின்னரே அவற் றைத் திட்டவட்டமாக விலக்க முடியுமாதலின், அத் தீய வழிகளில் சிலவற்றை இங்கே குறிப்பிடுகிறேன்.

வாங்கின கடன் கொடாமல் படி மோசஞ் செய் வது, ஊரார் உடைமையைப் பல உரிமைகள் பேசித் தனதுடைமை யாக்குவது, ஒற்றைக்கு இரட்டை அற மல்லாத வட்டி வாங்கிப் பெருக்குவது, வேலையாகும் வரைக் காலைப்பிடித்து அஃது ஆனபின் காலை வாரி விடுவது, கையுறை வாங்கிக் கலங்காது வாழ்வது, கள்ள வாணிபஞ்செய்து கொள்ளையடிப்பது, இவை போன்ற மோசம், அழிவு, ஒழுங்கீனம், முறையல்லா முறை, களவு, வஞ்சகம், நய வஞ்சகம் ஆகிய தீச் செயல்களைச் செய்து ஊரை ஏமாற்றிப் பணப் பெருக் கம் எய்துவது தீயோர் மேற்கொள்ளும் வழிகளாகும்.

எனவே, மாணவர்களே உங்களது வருங்கால வாழ்வில் இவ்வாருன தீய வழிகளிலெல்லாம் நீங்கள் இறங்கி யிடர்ப்படாமல் நேர்மையான முறையில் பணமீட்டுதற்கு முயலுதல் வேண்டும்.

---

ஒவ்வொருவரும் தாம் செய்கின்ற எந்தச் செயலே எடுத்துக்கொண்டாலும் அந்தச் செயலேச் செய்வதிஞல் "நாம் ஒரு பயனே அடைவோம்" என்ற அவாவின் காரணமாகவே அந்தச் செயல் செய்யப்படுதலே நாம் காணலாம். பொதுவில் அவா வின் தோற்றமே ஒரு செயல் நிகழ்வதற்குக் காரண மாக இருக்கிறது. அவா இல்லாதவன் எந்த ஒரு செயலேயும் செய்யமாட்டான்; சோம்பி விழுந்து கொண்டு சும்மாதான் இருப்பான். எப்படி தாகவிடாய் உள்ளவன் தண்ணீரை நிரம்பப் பருகுவாஞே, அப் படி ஒருவனுக்குள்ள அவாவின் அளவாகவே அமை யும் அவனுடைய ஆக்க வேலேகளெல்லாம். ஆகவே, இல்லாப் பொருளே ஆக்கவேண்டும். உள்ள பொரு ளேப் பெருக்கவேண்டும், என்ற அவா ஒருவர்க்கு உண்டாஞல்தான் அவர் பணந் தேடல் செய்வதற் கான ஒரு தொழிலேத் தொடங்க முடியும். அவா நிகழ்ச்சி இல்லேயேல் பணம் தேடல் என்ற பேச் சிற்கே இடமில்லாது போகும். இங்ஙனமெல்லாம் பார்க்கும்பொழுது பண ஈட்டச் செய்தற்கு அவாவே அடிப்படைக் காரணமாயிருத்தலே எல்லாரும் நன்கு அறியலாம்.

இந்த அவா, அற வழியை ஒட்டிய அளவிலும் அற வழியை ஒட்டாத அளவிலும் என இரண்டு வகையாக மக்களிடை நிகழும். அறவழியிலன்றி மற வழியில் மக்கள் பணமீட்டுதற்கு ஒரு போதும்

முற்படக் கூடவே கூடாது. ஏனெனில், அறன்வழி யல்லாத வழியில் ஈட்டப்படும் பணத்திற்குச் சிறப் பில்லாத தொருபுறம் இருக்க, அவ்வண்ணம் பண மீட்டுவோர் அரசியல் சட்ட திட்டங்களின்படி அகப் பட்டுக் கொண்டுபல அல்லல்களுக் குள்ளாகவேண்டி வரும். மனிதர்கள், குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக் கொள்வது எங்கும் வழக்கமில்லை. ஔவையாருங் கூட "தீவினை விட்டு ஈட்டல் பொருள்" என்று நமக்கு அறிவுறுத்தியிருக்கும்போது, நாம் முறையல் லாத முறைகளில் பணமீட்டும் அவாக் கொள்ளல் தகாத செயலாகும்.

இனிப் பண மீட்ட வேண்டும் என்ற அவா ஒரு வர்க்கு எப்பொழுது உண்டாகின்றது என்பதைப் பார்த்தால், பெரும்பாலும், அவர் பெரியவராகிக் குடும்பச் சுமை ஏறிய பின்னரே அது ஏற்படுகின்றது என்பதைக் காணலாம். பல குடும்பங்களில் நாளுக்கு நாள், திங்களுக்குத் திங்கள், ஆண்டுக்கு ஆண்டு, செலவினங்கள் நஞ்சுபோல் ஏறிக்கொண்டே போகும். தட்டு முட்டுப் பொருள்கள் வாங்கப் பணம், துணி மணிகள் வாங்கப் பணம், மருத்துவத்திற்குப் பணம், வாடகை கொடுக்கப் பணம் என எடுத்தவற்றிற்கெல் லாம் பணம் தேவைப்படும். அடுத்தபடியாகக் குழந் தைகள் ஒன்றன்பின் ஒன்றாய் வளர்ந்து, அவை களுக்காகத் தனிப்பட்ட துணி - மணி, படிப்புச் செலவு எனப் பல செலவுகள் ஏற்படும். வரும்படி குறைவாக இருக்கும்போது இந்தச் செலவு களையெல்லாம் தாங்கிப் பிடிப்பது எப்படி? எனவே, இவற்றிற்கெல்லாம் ஈடு செய்ய மேலும் பணம் வேண்டுமே என்று பணத்தின்மேல் முறையான

அவா நிகழ்கிறது. இவ்வாறு பணம் தேவையுண்டான போது அவா நிகழவே அவர்கள் பணமாக்குதலுக்கு அடிகோலிப் பணம் ஈட்டவேண்டும் என்ற உறுதி யுடன் ஒரு செயலைத் தொடங்குகின்றார்கள். இது வும் ஒரு நன்முறைதான். ஆனால், எல்லோரும் இவ் வாறு வந்தபின் காக்கும் திட்டம் வைத்துக்கொள்ளக் கூடாது. இல்வாழ்வார் ஒவ்வொருவருக்கும் எதிர் காலத்தில் பணம் வேண்டித் தானிருக்கிறது. ஆகை யினால், தேவை வருங்காலம் வரையில் தூங்கிக்கொண் டிராமல் ஒவ்வொருவரும் தன்னறிவு வந்தவுடன் பணம் வேண்டும் என்ற அவாவை வரவழைத்துக் கொண்டு பணம் ஈட்டல் செய்வதற்கான நல்ல வழி வகைகளை அறிய ஆராய்ச்சிகள் செய்துகொண் டிருக்கவேண்டும்.

தந்தையர்களானோர் தம் சிறுவர்களுக்கு இள மையிலேயே இவ்வுணர்ச்சியை யூட்டி வரவேண்டும். பணம் தேடவேண்டும் என்ற உணர்ச்சி இருந்து கொண்டிருந்தால், அவ்வவா அவர்களது அறிவைத் தூண்டிக்கொண்டே யிருக்கும். அப்படித் தூண்டப் பட்ட அறிவு, தக்கதொரு காலத்தில் அவ்வவாவைத் திண்ணமாகக் கைகூட்டிவிக்கும். இதுதான் பணந் தேடுவதற்கு முதற்படியாகும். ஆதலின், பணந் தேடவேண்டு மென்ற துடிப்பு இல்வாழ்வார் ஒவ்வொருவருக்கும் உடனடியாக உண்டாக வேண்டும்.

" இன்னல் தரும்பொருளை ஈட்டுதலுந் துன்பமே
பின்னதனைப் பேணுதலுந் துன்பமே—அன்னது
அழித்தலுந் துன்பமே அந்தோ பிறர்பால்
இழத்தலுந் துன்பமே யாம் "

என்ற பாட்டில் குறிப்பிட்ட வண்ணம் பொருள் ஈட்டு தலில் துன்பங்கள் இல்லாமலில்லை. உடலை வருத்தி உழைத்துத்தான் பெரும்பாலும் பணமீட்ட வேண்டி யிருக்கிறது. இப்படித் துன்பங்கள் இருக்கின்றனவே என்று எல்லாரும் பொருளீட்ட முற்படாமல் இருந்து விட்டால், பொருளின்மை காரணமாக உண்டாகும் துன்பங்கள் ஈட்டுதல் காரணமாக உண்டாகுந் துன் பங்களைவிட மிக மிகப் பெரிதாகு மாதலின், மாண வர்கள் இப்பாட்டையும் இதுபோன்ற பாட்டுக்களை யும் கண்டு இடையிடையே ஏற்படும் சிற்சில துன்பங் களினுல் உள்ளமுடைந்து போகாமல் மேன்மேலும் பொருளீட்டும் அவாவினை உடையராதல் வேண்டும். இத்தகைய பாடல்கள் நம் நினைவுக்கு வரும் போது கீழே தரப்படும் குறட்பாவும் நம் நினைவிற்கு வருதல் வேண்டும்.

" செய்க பொருளைச் செறுநர் செறுக்கு அறுக்கும்
எஃகு அதனில் கூரிய தில் " —

இதன் பொருள், பொருளை எவ்வாறேனும் பெருக்கிக் கொள்க, ஏனெனில் இப்பொருள்தான் நம் பகைவர் களின் செறுக்கை அறுக்கவல்ல கூரிய படையாகும். அப் பகைவர்களின் செறுக்கை அறுக்கவல்ல கூரிய படை இது தவிர்த்து வேறு இல்லை என்பது. இத் தகைய பாடல்கள் உங்கட்குத் தேவை.

சிலர் " மனிதர்களுக்கு மண்ணுசை, பொன் ணுசை, பெண்ணுசை எல்லாம் இருக்கக்கூடாது " என்று இவர்கள் கூறும் இக்கொள்கையை இல்வாழ் வார் எல்லாரும் கடைப்பிடிப்பது என்று வைத்துக் கொண்டு பார்த்தால் மண் (நிலம்) இல்லாமல் பயிர்த் தொழில் நடக்குமா ? பொன் (பணம்) இல்லாமல்

உலக வாழ்வு நடக்குமா? பெண் (மனைவி) இல்லாமல் இல்லறம் நடத்த முடியுமா? உண்மையில் உலகத்தில் இம் மூன்றும் இல்லாமல் எதுவும் நடக்கவே நடக்காது. ஆனால் இடைக்காலத்தில் தோன்றிய சிலர், இவ்வாறெல்லாம் துறவறத்தாருக்குக் கூறப்பட்ட திட்டங்களைத் தவறாக இல்லறத்தாருக்கு எடுத்துச் சொல்லி இல்லறத்தார் பலரை எந்த ஆக்க வேலையிலும் ஈடுபட வொட்டாமல் ஆக்கிவிட்டிருக்கிறார்கள். மாணவர்கள் இவ்வகைக் கருத்துக்களில் தம் மனதைச் செலுத்தாமல், உண்மையுணர்ந்து இவ்வுலக வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருளினைப் பெற முறையான "அவா" கொள்ளுதலே சிறப்புடைச் செயலாகும்.

---

## 7. நினைவு

மனிதனுடைய நினைவுகளையே அவன் பணம் ஈட்டுதற்கு தூண்டும் இரண்டாவது காரணமாகக் கூறலாம். நினைப்பது இல்லையேல் ஒரு செயல் நிகழ்ச்சிக்கு இடம் உண்டாவது எங்ஙனம்?

" ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல."

இதன் பொருள், 'உலகத்து மக்கள் ஒரு கண மேனும் உடம்போடு உயிர் சேர்ந்து நிற்குமென்று அறிந்துகொள்ளத் தகுதி இல்லாவிடினும், மயக்க அறிவால் பலகோடிகளாகிய எண்ணுள்பட்ட நினைவு களை நினைந்து நினைந்து உயிர இழக்கின்றவர் களாகின்றனர்.' என்பதாம்.

இக்குறளை நோக்கும்போது, வள்ளுவர் காலத்தி லேயே மனிதர்கள் "பலவாய நினைவுகளினால் பணம் ஈட்ட முற்பட்டிருந்தார்களென்றும், துறவறச் சிறப்புக் கருதித் திருவள்ளுவர் துறவறத்தார்க்கே இக்குறளைத் துறவறவியலில் வைத்துக் கூறினரே

---

* பலவாய நினைவுகளாவன :— " பொறிகளானுகரப்படும் இன்பங்கள் தமக்குரியவாமாறும், அதற்குப் பொருள் துணைக் காரணமாமாறும், அது தம் முயற்சிகளான் வருமாறும், அவற் றைத் தர முயலுமாறும், அவற்றிற்கு வரு மிடையூறுகளும் அவற்றை நீக்குமாறும், நீக்கி அப் பொருள் கடைக் கூட்டு மாறும், அதனைப் பிறர் கொள்ளாமற் காக்குமாறும், அதனால் நட்டாரை ஆக்குமாறும், நள்ளாரை யழிக்குமாறும் தாம் அவ் வின்பங்கள் நுகருமாறும் முதலாயின."—பரிமேலழகர்.

யன்றி, இல்லறவியலில் இஃது வைத்துக் கூறப் படாமையின், இல்வாழ்வான் பலவாய நினைவு களினல் பொருள் ஆக்கலாம் என்பதே அவர் கருத் தாக இருக்கவேண்டுமென்பது தோன்றுகிறது.

ஆகவே, பொருளை ஆக்குதற்கும், பணம் ஈட்டு தற்கும் செல்வம் பெருக்குதற்கும் தமக்கு என் னென்ன வழிகள் இருக்கின்றனவென்று மாணவர் கள் ஒழிந்த நேரங்களிலெல்லாம் ஆழ்ந்தாழ்ந்து தம் நினைவு செல்லக்கூடிய அளவு கோடியினும் மிக்குப் பல நினைக்கத்தான் வேண்டும்—வழிகள் கிடைக்கும் வரையிலும் விடாமுயற்சியோடு நினைத்தல்வேண்டும். நினைவை நாம் எண்ணியபடியெல்லாம் திரிய விடலாம். அதற்குக் காசு பணம் தேவையில்லை. மெல்ல நடக்கும் தொழிலை விரைவாக நடக்கப் பண்ணவும், நடக்காமல் நின்றுவிட்ட தொழிலை மீண்டும் நகரவைக்கவும், சிறிய அளவில் உள்ள தொழிலைப் பெரிதாகப் பண்ணவும் கூடிய ஆற்றல் களெல்லாம் நினைவிற்கு உண்டு.

ஒருவருக்குத் தம்முடைய வருமானம் போத வில்லை என்று தோன்றினல், உடனே அவர் தம் தொழிலில் மிகுந்த வருமானம் வருவதற்கு என்ன வழிகள் கிடைக்கும் என்று எண்ணிப் பார்த்து ஒரு தகுந்த வழியைக் கண்டுபிடிக்க வேண்டும். தம் தொழிலை மாற்றியமைக்கலாம். அல்லது வேருெரு துணைத் தொழிலைச் செய்யத் தொடங்கலாம். உலகத் தோற்றமே முதல்வன் ஒருவனின் நினைப்பால்தான் உண்டாயிற்று என்பது பல அறிஞர்களின் கருத்து. ஆகையினல், நன்கு எண்ணிப் பார்த்தால் எத்தகைய

வருக்கும் பணம் ஆக்குதலுக்கு சில வழிகள் திண்ண மாகத் தோன்றும்.

ஒன்றை நினைக்கி னதுஒழிந்திட் டொன்ருகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்.

என்ற பாட்டில், அது வரினும் வந்தெய்தும் என்ற அடி நம் கருத்திற்குப் பொருந்துவது கருதற்பாலது. அஃது ஒழிந்திட்டொன்ருகும் என்ற அடி பொருந்த வில்லையே எனின், அதற்குக் காரணம் நினைப்பில் குற்றம், அல்லது நினைத்தவற்றைச் செய்யும் முறை யில் குற்றம் நிகழ்ந்திருக்கவேண்டும் என்றுதான் முடிவு செய்தல்வேண்டும். எனவே, நினைப்பையும் செயலையும் நாம் நன்கு ஆராய்ந்து குற்றமறப் பொருத்தினுல் நினைத்தது வந்தெய்தும்.

பணமாக்குதற்கும் வாழ்க்கை நிலை உயர்விற் கும் எண்ணிப் பார்க்கின்ற பழக்கம் நம் நாட்டவ ருக்குப் பெரும்பாலும் இல்லை. "போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்ற மறை முடிவு பேசிக்கொண்டு குப்பையோடு குப்பையாய் மக்கிக் கொண்டிருப்பது தான் இவர்களின் வாழ்க்கை. ஏராளமான சொத்து உள்ளவனும் இம் மறைமுடிவு பேசிக்கொண்டு சும்மா யிருப்பாளுகில் அவன் தன் பணத்திற்கு அழிவு தேடுபவனுகவே கருதவேண்டும்.

ஆகவே ஒவ்வொருவரும் தங்கள் உயர்விற்குப் பணம் திரட்டல் வேண்டுமென்ற அவாவோடு யெண்ணிப் பார்த்துத்தான் உயர்வதற்கு ஒரு வழி கண்டுபிடித்தாக வேண்டும். நினைவைப் பயன்படுத்த நன்கு கற்றுக்கொண்டிருப்பவர்கள் மேல்நாட்டவர்

களே யாவர், எல்லாத் துறைகளிலும் இந்த முறையைக் கையாண்டுதான் அவர்கள் நாளுக்கு நாள் மென்மேலும் வளர்ந்து வருகிறார்கள். கல்வி, அறிவியல், வாணிபம், அரசியல் முதலிய பல துறைகளில் அவர்கள் முன்னணியில் இருப்பதற்குக் காரணம், நினைவைப் பயன்படுத்திக் கண்டு பிடித்த புதுப் புதுப் பொருள்களேயாம்.

பொழுது காட்டுங் கருவி, ஒலிப் பெட்டி, புகைப் படம், பேசும் படம், புகை ஊர்தி, மின்வலி ஊர்தி, நெய்யாவி ஊர்தி, வான ஊர்தி, வானொலி மற்றும் பல வகைப் பட்ட பொறிகள், போர்க் கருவிகள், மருந்து வகைகள், உணவு வகைகள் முதலாயின வெல்லாம் நம் போன்ற மனிதர்களின் நினைப்பின் வல்லமையால் கண்டு பிடிக்கப்பட்டவை! இவற்றைக் கருவிகளாகக் கொண்டு அவர்கள் தானே உலகில் எவ்வளவு ஏராளமான பணம் ஈட்டி விட்டார்கள் என்பதை நாம் ஒரு நொடிப்பொழுதேனும் எண்ணிப் பார்க்கவேண்டும்!

பணம் ஈட்டுதலுக்கு நினைவு ஒரு காரணமாயிருந்தபோதிலும், நம் நினைவின் பயனாய் நம் கருத்தில் தோன்றிய வழிகளைக் கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றிவிடுவதும் கூடாது. நாம் ஒன்றை விரும்பி அதை அடைதற்கான வழிகளைப்பற்றி எண்ணமிட்டதன் பயனாய்த் தோன்றிய கருத்தைச் செயல்படுத்தும் போதுதான் அதன் பொறுப்பு வெளிப்படும். நாம் கருதுவன எல்லாம் கைகூடிவிடுவது இல்லை. சிலவற்றிற்கு முன் சொன்னபடி கேடு நேரினும் நேரலாம். ஆகவே நாம் தொடங்க நினைக்கும் தொழிலைப் பற்றிய நுட்பங்களைக் கூடுமான அளவு

நூற்களில் படித்து அல்லது முறை, சிறப்பு, முதலான பழக்கம் பெற்றவரிடம் கேட்டு அறிந்தாகவேண்டும். அதன் பிறகே அத்தொழிலைத் தொடங்குவதற்கான ஒரு நிலையான முடிவுக்கு வர வேண்டும்.

நாம் தொடங்கும் தொழில் சோப்புச் செய்தலாய் இருக்கலாம். சீப்புச் செய்தலாய் இருக்கலாம். நெய்யாவி ஊர்தி பழுதுபார்க்குமிடமாக இருக்கலாம். கைவண்டிகள், கட்டை வண்டிகள், ஆள்இழுக்கும் வண்டிகள், வாடகைக்கு விடுதலாய் இருக்கலாம், உணவுக் கடையாக இருக்கலாம். இவை போன்ற வேறு தொழிலாயும் இருக்கலாம். நாம் மேற்கொண்ட தொழில் எதுவோ, அந்தத் தொழிலைப் பற்றிய நூல்களைத் தேடிப்பிடித்துப் படிப்பதினால் நமக்குப் பல நன்மைகள் உண்டாகும். நம் கருத்துக்குப் புலனாகாத சில உண்மைகள் அந்நூல்களால் புலனாகலாம். நாம் தவருகப் போட்ட சில புள்ளி விவரங்களையும் திருத்தியமைக்கலாம். நாம் எதிர்பாராத சில துன்பம், தொல்லை, பணக்கேடு முதலியவற்றை அவை நமக்கு எடுத்துக் காட்டலாம். இப்படியெல்லாம் அறிவு நிறைவு செய்துகொண்டு ஒரு தொழிலைத் தொடங்குவோமானால்தான் நாம் அத்தொழிலைக் குறைவறச் செய்து திண்ணமாக வெற்றிகாண முடியும்.

ஆனால், "நம் நாட்டில் நம் மொழியில் நாம் நினைக்கும் தொழிலைப் பற்றிய நூல்கள் இல்லையே" என்று சிலர் வினவலாம். வினா சரியானதே, நூல் எழுதப்பட்டில்லாத தொழிலா யிருந்தால், அத்தொழிலில் நெடுநாட்கள் பழக்கம் வாய்ந்தவர்களோடு கலந்து பேசி, அத்தொழிலிலுள்ள நுட்பங்களை

அறிதல் வேண்டும். நாம் வேண்டும் நூல் ஒரு வேளை ஆங்கிலத்தில் இருக்கலாம். அதனைப் பல்கலைக் கழக நூல் நிலையம், சென்னையிலுள்ள 'கன்னிமேரா நூல்' நிலையம் போன்ற பெரிய நூல் நிலையத்துத் தலைமை அலுவலாளரின் மூலம் அவ்வகை நூலைப் பெறலாம். அத்தகைய நூல்களை நம் தமிழ் மொழியில் மொழி பெயர்த்து நம் நாட்டு மக்களுக்குப் பயன்பட முயற்சி செய்யவேண்டும். "பிற நாட்டுச் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்" என்று நம் தேசிய கவிஞர் பாரதியார் பாடற்கருத்தை இது போது நம் நினைவிற்குக் கொணர்தல் வேண்டும். இவ்வாறெல்லாம் மாணவர் தம் நினைவைச் சீர்திருத்திக்கொண்டு செயலிலிறங்கினல் பிற்காலத்தில் அவர்கள் செயலால் நாடு சிறப்புற்றோங்கும்.

முயற்சி குன்றினல் எடுத்த எந்த ஒரு செயலும் கைகூடாமல் போகுமாதலால், முயற்சியின் பெருமையை மாணவர்கள் அறிந்து கொள்ளவேண்டும்.

நாம் அடைய விரும்பும் பணம் மட்டுமன்று. மற்றெப் பொருளையும் முயற்சியின்றி அடைதலரிது. கலத்திலிட்ட பாலடிசிலையுங் கூடக் கையாலெடுத்து உண்ணுமற்போனல் எவ்வாறு பசிதீரும்? "கடவுள் காட்டுவாரேயன்றி வாயில் ஊட்டமாட்டார்" என்பது பழமொழி. எனவே, ஒவ்வொருவருக்கும் முயற்சி செய்கின்ற உணர்ச்சிவரவேண்டும். சில வேளைகளில் முனைந்துமுயன்ருலும் வேண்டியபொருள் கிட்டுவதில்லை. சிலவேளைகளில் தாம் செய்யப்புகுந்த தொழிலுக்குத் தடைகள் வந்துவிடும். எனினும், உள்ளம் தளராது, ஊக்கங்குன்ருது, மேலும் மேலும் முயன்று உழைத்தல் வேண்டும். அப்படி விடா முயற்சியுடன் உழைப்பவனே வாழ்க்கைப் போரில் வெற்றி காணமுடியும்.

"அழுத பிள்ளையல்லவா பால் குடிக்கும்" என்ற பழமொழியை நாம் பலர்சொல்லக் கேட்டிருக்கிரேம். ஏன்? முருகப்பெருமான் தமக்கு அருள் செய்த நிலைமையினை நன்கு எடுத்துக் காட்ட இந்தப் பழமையின் கருத்தையே திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் "குழவி அழுத குரல் கேட்டுத் தாய் வந்தமுதூட்டும் கெழுதகைபோல" என்றே பாடியும் உள்ளார். மனிதனுக்கு முயற்சி வேண்டும் என்ற கருத்தை

வலியுறுத்தவே நம் நாட்டில் இப்பழமொழி உண்டாகியிருக்கிறது. குழந்தை அழாமல் இருந்தால் தாய் அதை எடுத்துப் பாலுட்டமாட்டாள். ஏனெனில் "குழந்தைக்குப் பசியில்லை, அதனால்தான் அது அழாமல் படுத்திருக்கிறது" என்று எண்ணிக் கொண்டு அவள் தனக்குள்ள வேறு வேலைகளில் ஈடுபட்டிருப்பாள். இப்படிப் பசியுள்ள குழந்தை சும்மாவிருந்தால் அதன் பசி தீர்வது எங்ஙனம்? ஆகவேதான் பசியுள்ள குழந்தை இயற்கையாக அழுகிற முயற்சியில் இறங்குகிறது. குழந்தையின் அழு குரலைக் கேட்ட தாய் எந்த வேலை யிருந்த போதிலும் அதைப் போட்டு விட்டு ஓடோடி வந்து குழந்தையை வாரி எடுத்துப் பாலூட்டுகிறாள். குழந்தையும் பசி தணிகிறது. குழந்தையைப் போன்று மனிதர்களும் தங்களுக்கு வேண்டிய பொருள் ஈட்ட பல முயற்சிகள் செய்து பார்க்கவேண்டும். அப்படி முயற்சி செய்தால் அவர்களுக்கு வேண்டிய பொருள்கள் கிடைக்கும் என்பதே இப்பழமொழியின் கருத்தாகும்.

எண்ணிப்பார்க்கின், முயற்சிகளைத்தான் நம்மவர் வேலையென்றும், உழைப்பென்றும் தொழிலென்றும் சொல்லுகிறார்கள் என்பது புலப்படும். வேலைக்குத் தான் கூலி. அல்லது முயற்சியின் அளவாகத்தான் கூலி கிடைக்குமே யல்லாமல், வேலை செய்யாதவனுக்கு கூலி கொடுப்பார் யார்? விதைக்காதவன் எவ்வாறு அறுக்க முடியும்? விதைக்க வேண்டிய காலத்தில் விதைக்காது வீட்டில் உறங்கி விட்டு அறுக்கவேண்டிய காலத்தில் அரிவாள் கொண்டு செல்வானாகில் என்ன பயன்? சோம்பிச் சும்மா இருப்பவர் எந்நாளும் கடைத்தேற மாட்டார். எந்த மனி

தனும் தான் தொடங்கிய எந்தத் தொழிலும் வெற்றி பெற வேண்டுமானால், ஓயாத உழைப்பும் சலியாத முயற்சியும் மேற்கொள்ள வேண்டும். கடுமையாக உழைப்பவனே உலகில் ஏற்றமடைவான். உழைப்பே மனிதனுக்கு ஆக்கம், உயர்வு, மேன்மை, புகழ் முதலிய சிறப்புக்களையெல்லாம் தரவல்ல துணைவனாகும். எனவே, பணம் ஈட்டக் கருதும் ஒருவன் சோம்பலொழித்து சுறுசுறுப்பை மேற்கொண்டு 'இனி நான் கடுமையாக உழைப்பேன்' என்று உறுதியான திட்டம் அமைத்துக் கொண்டு அதன்படி நடக்க வேண்டும்.

திருவள்ளுவர் இந்தக் கருத்தினையே முயற்சி என்ற தலைப்பின் கீழ் கூறுகிறார். தம் சிறுமை நோக்கி தாம் தகுதியுடையம் அல்லோமென்றெண்ணி எண்ணிய செயலை விட்டுவிடக் கூடாது. செயல் முடித்தற்கு ஏற்றதொரு தகுதியை முயற்சி என்பது உண்டாக்கும். முயற்சி செல்வத்தினை வளர்க்கும். முயற்சியுடையான் மாட்டுச் செல்வம் தானே வழி வினவிக்கொண்டு செல்லும். தெய்வத்தான் இடுக்கண் வரினும் மெய்வருத்தக் கூலி தருமாதலின் முயற்சி விடற்பாலதன்று. ஊழ் என்பதையும் முயற்சியால் விலக்குதல் கூடும். இக்கருத்துக் களடங்கிய திருக்குறள்கள் சிறப்பு வாய்ந்தன என்ற நோக்கத்தோடே இங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

> "அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
> பெருமை முயற்சி தரும்."

இதன்பொருள், "ஒருவன் தன்னுடைய தகுதியின்மையினை நோக்கி தாம் இவ்வினை முடித்தல் அருமையுடைத்தென்று எண்ணி எண்ணிய செயலை விட்டு

விடுதல் கூடாது; அச்செயலை முடித்தற்கு ஏற்ற பெரியதோர் தகுதியை "முயற்சி" என்பது உண் டாக்கும்" என்பது

"முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
யின்மை புகுத்தி விடும்."

இதன்பொருள், 'ஒருவனிடத்து உள்ளதாகிய முயற்சி யுடைமையானது அவனுடைய செல்வத்தை வளர்க் கும். அவ்வகை முயற்சி இல்லாமை வறுமையைக் கொண்டுவந்து விட்டுவிடும்.' என்பது

"ஆக்க மதர்வினுய்ச் செல்லு மசைவிலா
ஊக்க முடையா னுழை."

இதன்பொருள், 'அசைவில்லாத ஊக்கமுடைய ஒருவ னிடத்துப் பொருளானது அவன் இருக்குமிடம் தேடிப்போய்ச் சேரும்.' என்பது

"தெய்வத்தா னுகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்."

இதன்பொருள், 'ஒருவன்முயன்றுசெய்தசெயலானது ஊழ்வலியால் எண்ணிய பயனைக் கொடாதாயினும், செய்த முயற்சியானது அம்முறையின் பொருட்டு உடம்பு வருந்திய வருத்தத்திற்குத் தக்க அளவேனும் ஏதாவது சிறுபயனைத் தருமேயன்றிப் பாழாகாது. என்பது

"ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று வபர்."

இதன்பொருள், 'ஒருவன் எண்ணிய பயனை விலக்கு கின்ற "ஊழ்" என்பதையும் அதன் விலக்கிற்குச் சிறிதும் இளையாது தான் எடுத்த செயலைச் சூழ்ச்சியி

னாலும், இடமறிதல், காலமறிதல், வலியறிதல் ஆகிய செயற்களைச் செய்கின்ற காலத்துக் குற்றமில்லாமல் செய்து முடிக்க வல்ல முயற்சியாலும் விலக்குதல் கூடும்.' என்பது.

நம் நாட்டுப் பொருளாதார நிலைமை தாழ்ந்த நிலையில் இருப்பதை யாவரும் அறிவர். அதைப் போக்கவேண்டிய முழுப் பொறுப்பும் நம் அரசியலா ருடையதாயினும், பொதுமக்களாகிய நாமும் நம்மா லான முயற்சிகளை நம் தேவைக்கு வேண்டிய அளவு செய்வதில் ஈடுபடவேண்டும். அரசியலார் பொதுப் படையாகச் செய்யும் ஏற்பாடுகள் ஒருபுற மிருக்க, நாம் தனிப்பட்ட முறையில் செய்யும் முயற்சிகளே நமக்கு உடனே நேரடிப் பயன் தர வல்லன. அதைக் கருத்திற்கொண்டு ஒவ்வொரு வரும் தனித்தனி முயற்சி செய்யத் தலைப்பட்டு விட்டால் அதிவிரைவில் பொது நிலைமையிலும் நல்ல மாறுதல் உண்டாகி, நாடு நலம் பெற்றுவிடும்.

"தொன்னைக்கு நெய்யாதரவு, நெய்க்குத் தொன் னையாதரவு" என்றபடி ஒவ்வொரு மனிதனுடைய செல்வத்தின் உயர்வு தாழ்வுகளுக்கு அவன் வாழும் நாட்டின் செல்வ நிலையும் ஒரு நாட்டினுடைய செல் வத்தின் உயர்வு தாழ்வுகளுக்கு அந்நாட்டில் வாழும் ஒவ்வொரு தனிமனிதனுடைய செல்வ நிலையும் ஒன்றுக்கொன்று ஓரளவு காரணமாயிருக்கின்றது. ஆகையினால், நாட்டு மக்களும் அரசியலாரும் தனித்தும் சேர்ந்தும் பொறுப்புடனும் உறுதியுடனும் கல்வி வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, பொருள் வளர்ச்சி ஆகியவற்றில் விறுவிறுப்போடு ஈடுபட்டு நாட்டின் செல்வ நிலை உயர்வடைய ஒத்துழைக்க வேண்டும்.

பெரும்பாலும் நாட்டுப்புறங்களும், விவசாயிகளும் நிறைந்துள்ள நம் இந்திய நாட்டில் நிலையான பொருளாதார முன்னேற்றம் ஏற்படுத்த வேண்டுமானல் முதன்மையாகப் பயிர்த் தொழிலில்தான் மிகுந்த கருத்துச் செலுத்தவேண்டும். பழங்கால முறைப்படி நிலங்களுக்குச் சாணி எருவையே போட்டு வருவதை மாற்றி உழவர்கள் விளைவைப் பன்மடங்கு மிகைப்படுத்தக்கூடிய சல்-பேட்-ஆப்-அமோனியா, எலும்புத் தூள் போன்ற சிறந்த உரங்களைப் பயன் படுத்தக் கற்றுக்கொள்ளவேண்டும். இயற்கைப் பாசன வசதிகள் இல்லாத நிலங்களுக்கு விசைப் பம்புகள் அமைத்துத் திறமையுடன் பயிரை வளர்க்கவேண்டும். நம் நாட்டு விவசாயிகளுக்கு ஆண்டு முழுவதும் பயிர்த்தொழிலில் வேலை இருப்பதில்லை. சில தினங்களுக்கு அவர்கள் ஓய்ந்திருக்க வேண்டி வருகிறது. அப்பொழுது அவர்கள் காலத்தை வீணுக்காமல் தக்க துணைத் தொழில்களில் ஈடுபட்டு முயன்று பணமாக்கவேண்டும். உழவரல்லாத மக்கள் நம் நாட்டுக் குடிசைக் கைத்தொழில்களில் ஈடுபட்டு முயன்று பணமீட்ட வேண்டும்.

குடிசைத் தொழில்களாவன :— நூல் நூற்றல், துணி நெய்தல், சாயவேலை, பாய் பின்னுதல், தையல்வேலை, வெல்லம் காய்ச்சுதல், மிட்டாய் செய்தல், மீன் பிடித்தல், கயிறு திரித்தல், சோப்புச் செய்தல், தீக்குச்சி செய்தல் முதலியன.

இன்று பொதுத் தொழில் வளர்ச்சிக்காக நம் நாட்டிலுள்ள பணம்படைத்த செல்வந்தர்கள் பல பெரிய பெரிய இயந்திர நிலையங்களைத் தோற்றுவித்து மோட்டார், மரக்கலம், வான ஊர்தி, கடிகாரம்

முதலிய பொருள்களுக்கு மேனுட்டாரை எதிர் பார்க்காமல், அவற்றை நம் நாட்டிலேயே செய்வதற்கான முயற்சிகளில் ஈடுட்டுள்ளார்கள். நம் அரசியலாரும் இப்படிப்பட்ட பெரிய முயற்சி செய்ய முன்வருபவர்களுக்கு உதவி புரிந்து, அவர்களுக்கு ஊக்கமளிக்க முன்வந்துள்ளது. இதனுல் நம் நாட்டுச் செல்வநிலை உயரும்; நம் செல்வம் அயல் நாடுகளுக்குச் செல்லாமல் நம் நாட்டிலேயே தங்கியிருக்கும்.

நம் நாட்டில் இப்பொழுது செல்வங் குறைந்து பலவிடங்களில் பஞ்சப் பேய் தாண்டவமாடுவதற்குப் பற்பல காரணங்கள் உண்டெனினும், அவற்றுள் முதன்மையானவை நம்மவர்களுக்குள்ள சோம்பல் மனப்பான்மை, உள்ளது போதுமென்ற கொள்கை, சில தொழில்களை விரும்பாதது - போன்ற மனப்பான்மை ஆகியவைகளுமேயாகும். பலகுடும்பங்களில் ஒருவன் ஓடியாடி பொருளீட்ட ஒன்பதுபேர் உட்கார்ந்துகொண்டு சாப்பிடுவர். ஏன் அவ்வளவுபேர் உழைக்காமல் உண்ண வேண்டும்? பொருளீட்டாமல் சாப்பிடவேண்டும்? ஒருவேளை, அவர்கள் "நாங்கள் என்ன செய்வது? வேலை கிடைக்கவில்லையே," என்னலாம். இது சிலர் கூற்றில் உண்மையாக இருக்கலாம். ஆனுல், பலர் உடல் நலம் கருதி வேண்டுமென்றே எந்த வேலையும் செய்யாமல் ஊர் சுற்றிவந்து உண்கிருர்கள். இது மன்னிக்கமுடியாத மாபெருங் குற்றம், தங்களுக்குக் கேடு தேடிக்கொள்வதல்லால், தங்கள் குடும்பம், மக்கட் தொகுதி, நாடு ஆகியவற்றிற்கும் கேடுதேடித் தருபவர்கள் இவர்கள்.

மேல் நாடுகளில் இன்னேரன்ன ஆட்களைப் பார்க்க முடியாது. அங்கெல்லாம் பெண்களுங்கூட

ஆண்களைப் போலவே தம் முயற்சியுடன் பலவகை வேலைகளைச் செய்து வருகிறார்கள்! அதனால்தான் அங்குப் பஞ்சம், பட்டினி, பற்றுக்குறை, பணத் தொல்லை முதலியவற்றைப் பெரிதும் பார்க்க முடிவதில்லை.

எனவே, அனைவருமே முயன்று முயன்று முன்னுக்கு வரவேண்டும். எச்செயலையும் செய்வதற்கு இயலாத அரிய காரியமாயினும் முயற்சியின் வழி அதனை முடிக்கும் ஆற்றலைப் பெறமுடியும்.

---

# 9. அறிவு

நாம் ஏதேனும் ஒன்றைப் பற்றி ஆழ்ந்து எண்ணுங் காலங்களில் நம்முடைய அறிவுதான் நமக்கு மிகுதியுந் துணை புரிகின்றது. பின் இவ்வறிவின் அளவிற்குத் தகுந்தவாறுதான் ஏறக்குறைய நம் எண்ணத்தின் முடிவும் ஏற்படுகின்றது. அறிவென்ருல் பள்ளிக்கூடப் படிப்பினுல் உண்டாகும் மொழியறிவு, கணித அறிவு, பொது அறிவு முதலியவை மட்டுமல்ல. பள்ளிக்கூடத்தில் படிக்காமலே தனிப்பட்ட முறையில் படித்தவையும் கேட்டவையும் நேரில் கண்டவையும் பற்பல துறைகளில் பெற்றுள்ள பழக்கங்களும் அறிவுதான். ஆகையினுல், ஒருவர் தம் அறிவு எந்தத் துறையில் ஆற்றல் பெற்றிருக்கின்றதோ அந்தத் துறையில் தம் நினைவைச் செலுத்திப் பணம் ஈட்டும் வழி காணலாம். ஒருவருடைய அறிவு அவரது தொழில் நிலை, பழக்க நிலை, சூழ் நிலை முதலியவற்றிற்குத் தகுந்த அளவு அவருடைய உள்ளத்தில் ஓர் உத்தியாய் வந்து தோன்றும்.

ஒருவர் தம்மறிவிற்கு அப்பாற்பட்ட துறைகளில் நுழைந்து பணம் ஈட்ட முற்பட்டால் அவருக்கு இடையூறு வருமேயல்லால், வெற்றி வருவது அருமையாகும். இந்நுட்பத்தை யுணராமல் பலர் பிறன் சொற்கேட்டுத் தமக்குப் பழக்கமில்லாத புதுத் துறைகளில் இறங்கி ஏமாற்றமடைகிருர்கள். இவ்வாறு வருங்காலத்தில் நீங்கள் ஏமாறக்கூடாது.

இனி, எடுத்த செயல் வெற்றியடைய நாம் கையாளவேண்டிய நேர் வழிகள் ஒருபுறமிருக்கக் குறுக்கு வழி வகைகளும் சில உண்டு. செல்வத்தாலும் செல்வாக்காலும் செய்து முடிக்க இயலாத பல செயல்களை அறிவாளிகள் தந்திரம், உத்தி, உபாயம் என்று சொல்லப்படும் சூழ்ச்சிகளினால்தான் செய்து முடிக்கிறார்கள். ஆகையினால், இவைகளைப் பற்றியும் சுருக்கமாய்க் கவனிப்போம்.

தந்திரங்கள்:—நட்புப் பிரித்தல், நட்பைப் பெறல், அடுத்துக் கெடுத்தல், பொருளழிவு, ஆராயாது செயல் என ஐந்து வகைப்படும். இவற்றை விரிவாய் அறியவேண்டுமானால் வித்துவான் தாண்டவராய முதலியார் எழுதிய பஞ்ச தந்திரம் என்னும் நூலைப் படித்து அறிந்துகொள்ளலாம்.

உத்திகள் :—" ஏற்புழியறிந்து இதற்கிவ்வகை யாமெனத் தகும் வகை செலுத்துதல் தந்திர உத்தி " என்பது நன்னூல் சூத்திரம். இதில் குறிப்பிட்ட வண்ணம் சூழ்நிலைக்குப் பொருந்து மிடமறிந்து நாம் நமது அறிவைச் செலுத்தி ஆராய்ந்தெடுத்த கருத்துக்களே உத்திகளாகும்.

உபாயங்கள் :—இவை சாம பேத தான தண்டம் என நால்வகைப்படும். சாமம் (ஒன்றுபடுத்தல்)-தனக்கும் பிறன் ஒருவனுக்கும் இடையே ஒற்றுமையைத் தோற்றுவித்து அவனைக் கவருவது, பேதம் (வேறுபடுத்தல்) - தான் பிறனொருவனினும் மேலானவன் என்பதை வெளிப்படுத்தி அவனைக் கவருவது. தானம் (கொடுத்தல்) - ஒருவன் மற்றொருவனுக்குப் பொருளைக் கொடுத்து அவனைக் கவருவது. இவ்வாறு செய்வதை நன்கு விளக்கவே " கெண்டையைப்

போட்டு வராலே இழு" என்னும் பழமொழியும் நம் மிடையே உலவி வருகிறது. தண்டம் (தண்டித்தல்)- தண்டனைப் பயங்காட்டி ஒருவன் பிறனொருவனைக் க்வருவது. ஒன்றைப் பற்றி நினைக்கும் ஒரு வருக்கு இச்சூழ்ச்சிகளுள் வேண்டுவது எதுவோ அதை எடுத்துப் பயன்படுத்தித் தம் செயலில் வெற்றி பெறுதல் வேண்டும்.

> " அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலா
> ரென்னுடைய ரேனு மிலர். "

இதன் பொருள், 'அறிவுடையவர் யாதொரு பொருளும் இல்லாத வறிஞராக யிருப்பினும், தம் முடைய அறிவுடைமையால் எல்லாப் பொருளையும் உடையவர் ஆவார். அறிவில்லாதார் எல்லாப் பொருளையும் உடையவராயினும் ஒன்று மில்லாதவ ராகவே இருப்பர்' என்பது.

சூழ்ச்சிகளைத்தான் ஆங்கிலத்தில் 'Ideas, Plans.' என்றெல்லாம் சொல்லுகிறார்கள். எந்த ஒரு செய லில் நுழைவதென்றாலும் ஒரு நோக்கத்தோடுதான் அச்செயலில் நுழையவேண்டும். பள்ளி மாணவனென போதிலும் அவன் தன் வகுப்புத் தேர்விற்காக முன் கூட்டி எண்ணிப் பார்த்து எந்தெந்தப் பகுதிகளில் எந்தெந்தக் கேள்விகள் வரக்கூடும் என்பதனை ஆழ்ந் தறிந்து அவற்றைக் குறிப்பெடுத்து முறைப்படுத்தி நன்கு படித்தாலல்லவா தேர்வில் வெற்றி பெற முடியும்? தொழிலாளிகளும் வணிகர்களும் தங்கள் தொழிலிலும் வாணிபத்திலும் வளர்ச்சியில்லை என்று கண்டவுடன் வேறு உத்திகள் செய்துதான் தம் தொழிலையும் வாணிபத்தையும் வளர்த்தாகவேண்டும்.

TAMILNADU ARCHIVES No. 107266

ஒரு தொழில் செய்வதற்கும் அது நடப்பதற்கும் முதற்பணமும் பழக்கமும் இருந்தால் மட்டும் போதாது. இவ்விரண்டையும் விட, அத்தொழிலை மேற்கொண்டவருக்கு மிக முதன்மையாக இருக்க வேண்டியது சூழ் நிலைக்குப் பொருத்தமான நுண்ணறிவுகளைக் கையாளும் திறமையேயாகும். தம் தொழில் வளர்ச்சிக்குத் தேவையானவை எவை? பொருளை வாங்குகிறவர்களா? அல்லது வேலைத் திறமையா? அல்லது பொருளின் தகுதிகளா? அல்லது விளம்பரமா? என்பனபோன்ற குறைகளில் எந்தக் குறையினால் தம் வாணிபம் வளர்ச்சி பெறவில்லை என்பதை ஆராய்ந்து அறிந்து அந்தக் குறையை நீக்க முயற்சி செய்யவேண்டும்.

"சுயபுத்தி சுகஞ் செய்யும்" என்றொரு பழமொழி நம்மவரிடையே வழங்கப்படுகிறது. இதைக் கருத்திற் கொண்டு தம்மறிவிற்குத் தோன்றியவாறு நடப்பதைக் காட்டிலும் தமக்கு உயிரானவர்களுடனும் கலந்தெண்ணிப் பார்த்து ஒரு செயலிலிறங்குவது மிகவும் நல்லது. *'ஒருவர் ஒன்றை முடிவு கட்டுவதினும் இருவர் கலந்து ஆராய்ந்து முடிவு கட்டுதல் சிறந்தது' என்று ஆங்கிலப் பழமொழி சொல்லுகிறது.

இனி, நாம் பொருள்களைப் பார்க்கும் போதெல்லாம் அவற்றைப் பொதுவாகப் பார்ப்பதோடு மட்டும் விட்டுவிடாமல், அவை எவ்வாறு அமைந்துள்ளன? அவற்றிலிருந்து நாம் என்னென்ன கற்றுக்கொள்ளலாம்,? அவற்றை வேறு எப்படி எப்படித் திருத்தலாம்? அவற்றிலிருந்து வேறு எவ்வெப் பொருள்களைத் தோற்றுவிக்கலாம்,? அவற்றின் அமைப்பையும்

* "Two heads are better than one"

அழகையும் வேறு எப்படி யெப்படி இன்னும் மிகைப் படுத்தலாம்? என்பன போன்ற ஆராய்ச்சி உள்ளப் பாங்கோடு ஊன்றிப் பார்த்தல் வேண்டும். இப்படித் தொழிலையும் அவை செய்யப்படும் இடங்களிற் சென்று அவை எவ்வாறு செய்யப்படுகின்றன என் பதையும் ஊன்றிப் பார்க்கவேண்டும். இவ்வாறெல் லாம் பார்ப்போமானல், நம் பார்வை நமக்குப் பல அரிய ஆராய்ச்சிக் கருத்துக்களைத் தோற்றுவிப்ப தல்லாமல், அது நம் அறிவு வளர்ச்சிக்கும் பணம் ஆக்குதலுக்கும் பெரிதும் உதவும்.

உலகிலுள்ள பல அரிய, வியக்கத்தக்க, கண்டு பிடிப்புகளைத் தோற்றுவித்தவர்க ளெல்லாம் பொருள் களையும் தொழில்களையும் செய்யும் திறனையும் ஊன்றிப் பார்த்துப் பார்த்து வந்ததன் காரணமாகவே புதிய உத்திகள் அவர்களுக்குத் தோன்றி அந்த உத்தி களைக்கொண்டு புதிய கண்டுபிடிப்புக்களை உலகில் தோற்றுவித்தார்கள்; ஏராளமான பணம் ஈட்டி ஞர்கள்; ஈட்டிக்கொண்டும் வருகிருர்கள். இவர்க ளெல்லாம் எப்படிப்பட்டவர்கள்? வானைவிட்டு வந்திறங்கிய வானோர்களா? அல்லது அளத்தற்கரிய ஆற்றல் படைத்த வியத்தகு பிறவிகளா? அல்லர்; அல்லவே அல்லர். இவர்களெல்லாம் நம்போன்ற மனிதர்களே யாவர். சிலர், மிகத் தாழ்ந்த நிலையில் இருந்தவர்கள் என்பதை அவர்களுடைய வரலாற்றைப் புரட்டிப் பார்த்து அறியலாம். ஆகவே, நாம் பொருள்களையும், தொழில்களையும், ஆக்கியவரது ஆற்றல்களையும் ஊன்றிப் பார்க்கிற பழக்கத்தை இளமையிலிருந்தே வளர்க்க வேண்டும். இப்பழக்கத்

தால் நமக்குப் பல அரிய கருத்துக்கள் தோன்றும். அக்கருத்துக்களைப் பயன்படுத்தி நாம் எளிதாகப் பணம் ஈட்டுதல் செய்ய வழிகோல வேண்டும்.

அரசியலார்களும் சில தனிப்பட்ட நிலையங்களுக்கு உரியவர்களும் பல ஊர்களில் பொருட் காட்சிகளை அமைக்கிறார்கள். இப்பொருட் காட்சிகளின் முதன்மையான நோக்கம் என்ன என்பதை மக்கள் பெரும்பாலும் சிந்திப்பதில்லை. வெறும் கண்காட்சிக்காகவும் பொழுது போக்குக்காகவும் தான் இஃது அமைக்கப்படுவது என்று மக்கள் பலர் நினைந்து கொண்டிருக்கிறார்கள். அடிப்படை நோக்கங்களை மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். பொருட் காட்சிகளை நிறுவுகிறவர்களுடைய நோக்கங்கள் எல்லாம் கண்காட்சியின் வாயிலாகக் காசாக்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளைக் கொண்டதாகவே இருக்கின்றது. ஆதலின், அவர்கள் தங்கள் நோக்கம் நிறைவேறுவதற்கு வேண்டிய விளம்பரம் முதலியவற்றைக் குறைவறச் செய்திருப்பார்கள். ஆனால், பார்க்க வருபவர்களுக்கும் பயன் இருக்க வேண்டுமே என்பதைச் சிறிதேனும் உணர்ந்து நடந்திருக்க மாட்டார்கள்.

பொருட்காட்சிக்கு வரும் பொருள் உற்பத்தியாளர்கள் தங்கள் 'ஸ்டால்' களுக்கு இன்ன இன்ன நோக்கமுள்ளவர்கள் இன்ன நேரங்களில் பார்க்க வந்தால் விளக்கப்படும் என்று நுழைவு முகப்பில் குறித்துத் தொங்கவிடவேண்டும். அதன்படி வருகிறவர்களுக்கு தங்கள் பொருள்களின் தரம், அதற்கு வேண்டிய மூலப்பொருள்கள், இயந்திர சாதனங்கள், நிபுணர்கள் தரத்தைப் பார்த்து சீர்திருத்தல் இவை

போன்றவற்றை விளக்க வேண்டும். இவ்விதம் செய்வதற்கே பொருட்காட்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. பொருட்காட்சியினுல் பொது மக்களின் அறிவும் வளர்ச்சியடையும். உற்பத்தியாளர்களது பொருளின் தரம் மக்களிடையே பரவும். அதனுல் நம் நாட்டு வாணிபமும் பெருகும்.

அவர்கள் எப்படிப் போனுலும் போகட்டும், இனியேனும் ஒவ்வொருவரும் தாம் பார்க்கும் காட்சிகளை ஆராய்ச்சி நோக்கத்தோடு ஊன்றிப் பார்க்க வேண்டும். அப்படி நடந்தால் ஒரு சிலருக்கேனும் ஒன்று அல்லது பல விளக்கங்கள் தோன்றி அவற்றின் பயனுய் அவருடைய தொழில் சீர்திருத்தமடைந்து விரைவில் மேல் நாடுகள் போன்று நம் நாட்டு மக்களும் பணம் திரட்டமுடியும்.

களிப்பூட்டும் பயணம், சுற்றுப் பயணம், நாட்டுப் பயணம், கோவில் பயணம் முதலியன செய்யும் போதும் களிப்பு, உடல் நலம், தொழில் ஆகிய நோக்கங்களோடு மட்டும் அவற்றைச் செய்துகொண்டிராமல், எதிர்ப்படும் புதுப் புதுப் பொருள்களைப் பார்த்து வைத்துக்கொண்டு அறிவுக்கு விரிவு தந்து வாழ்வில் மேலும் உயர்வடைதல் வேண்டும். எதையும் ஆராய்ச்சிக் கண்கொண்டு பார்க்கவேண்டும். 'தனக்குப் பயனே பிறர்க்குப் பயனே தனக்கும் பிறர்க்கும் சாரிரு பயனே,' என்று சுவாமிநாத தேசிகரென்பவர் தம் இலக்கணக் கொத்து என்ற நூலில் வினைகளை மூன்ருகப் பிரித்துக் காட்டியுள்ளது மக்கள் முன்னேற்றத்தைக் கருதியேயாகும்.

பல புதிய நாகரிகப் பொருள்களெல்லாம் மேல் நாடுகளில்தான் கண்டுபிடிக்கப்பட்டன என்பது

அனைவருக்கும் தெரிந்த செய்தியாகும். அவற்றைப் பார்த்த பின்னர்தான் அவ்வகைப் பொருள்கள் நம் நாட்டிலும் செய்யப்பட்டன. படித்தவர்களைப்பார்த்துத்தான் படிக்காதவர்கள் படிக்க முற்பட்டார்கள். முற்போக்காளர்களைப் பார்த்துத்தான் முற்போக்கில்லாதவர்கள் திருந்த ஆரம்பித்தார்கள்; மேல் நாட்டு அரசியல் தலைவர்களைப் பின்பற்றித்தான் நம் நாட்டுத் தலைவர்களும் அரசியலில் பங்கு கேட்கவும் தலைப்பட்டார்கள். அதன் பயனுற்தான் நம் நாடு இன்று விடுதலை யடைந்து உலகில் சிறப்புற்று விளங்குகிறது. ஆகவே, ஒவ்வொருவரும் தாங்கள் உயர்வடைய பார்த்துப் பழகவேண்டும். பார்த்துத் திருத்தவேண்டும். பார்த்துக் கற்றுக் கொள்ள வேண்டும். எல்லாவற்றிற்கும் மூல காரணமான அறிவைப் பயன் படுத்தி முன்னேற்றம் காண ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டும்.

---

முன்னைய இயலில் கூறிய நுண்ணறிவுகள் அனைத்தையும் உணர்ந்துகொண்டு ஒவ்வொருவரும் எண்ணியதொரு தொழிலைச் செய்யும் பொழுது திறமையுடன் பிழையின்றிச் செய்யவேண்டும். தாம் எடுத்த தொழிலை முடிக்கவல்ல ஆராய்வு நிகழ்த்தும் பொழுது இடமறிதல், காலமறிதல், வலியறிதல் முதலியவற்றை நன்கு ஓர்ந்து செய்தல் வேண்டும். இப்படி ஓர்ந்தறிதலையே திறமையென்று சொல்லப் படும். இத்திறமை நுட்பங்களை நாயனார் தம் திருக் குறளில் பல பாட்டுக்களில் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வோரதிகாரம் வகுத்து அழகாகவும், தெளிவாகவும் எடுத்துக் காட்டியிருக்கிறார். அவையனைத்தும் மாண வர்கள் கற்றற்குரியன எனினும், "பானை சோற்றிற் கொரு சோறு பதம்" என்ற முறையில் அவற்றுள் ஓரதிகாரத்துக்கொரு குறளைமட்டும் இங்குக் குறிப்பிடு கிறேன். மாணவர்கள் இவற்றின் பொருள்களை நன் குணர்ந்து வினை செய்யுந்திறன் பெறல் வேண்டும்.

## (இடனறிதல்)

"தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
இடங்கண்ட பின் அல் லது"

இதன்பொருள், 'ஒருவன் தன் பகைவரைப் பகைத் துக் கொள்வதற்குத் தக்க இடம் பெறுவதற்கு முன்னர் எவ்வகைத் தொழிலையும் தொடங்குதல் கூடாது; [எப் பகைவரையும் இவர் தம் முன் மிகச்

சிறியர் என்று இகழ்வதையும் ஒழித்து விடுதல் வேண்டும்] என்பது.

(காலமறிதல்)

"பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு."

இதன்பொருள், 'ஒருவன் காலத்திற்குத் தக்க அளவாக தான் எண்ணிய தொழிலைச் செய்தொழுகுதல் யாரிடத்தும் நிலைத்து நில்லாது உருண்டு வருகின்ற செல்வத்தினைத் தன்னிடத்தே நிலைத்து நிற்கச் செய்யும் ஒரு கட்டும் கயிறுக்கு ஒப்பாகும்' என்பது.

(வலியறிதல்)

"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்."

இதன்பொருள், 'ஒருவன் தான் செய்ய எண்ணிய தொழிலின் வலிமையையும் அதனைச் செய்து முடிக்கும் தன்னுடைய வலிமையையும் பிறகு தனக்கும் பகைவனுக்கும் துணையாக நிற்பவரது வலிமையையும் சீர்தூக்கித் தன் வலி மிகுமாயின் அவ் வினையைச் செய்தல் வேண்டும்." என்பது.

(வினை செயல் வகை)

"முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்."

இதன்பொருள், 'ஒருவன் ஒரு செயலைச் செய்யுமிடத்து அது முடிவதற்குச் செய்யவேண்டிய முயற்சியினையும் அப்படி முயற்சி செய்யும் காலத்து நடுவில் வரும் இடையூறுகளையும் அவ்விடை யூறுகள் நீங்கி, எடுத்த செயல் முடிவதால் தானடையும் பயனையும்

ஆகிய இவைகளை எல்லாம் கணக்கிட்டுப் பார்த்து ஒரு செயலைச் செய்தல் வேண்டும்' என்பது.

(தெரிந்து செயல் வகை)

" அழிவதூஉ மாவதூஉ மாகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல். "

இதன்பொருள், ' ஒருவன் ஒரு வினையைச் செய்யுமிடத்துச் செய்கின்ற காலத்தில், அதனால் எவ்வளவு பொருள் செலவழிக்கப்படுகின்றதென்றும், அவ்வாறு செலவழிக்கப் படுவதால் பின்னர் ஈட்டப்படுவதெவ்வளவென்றும் இப்படி வந்ததாகிய பொருள் தரும் ஊதியத்தின் அளவையும் நன்ருக ஆராய்ந்து வினையைச் செய்யவேண்டும்.' என்பது

" ஆரியக் கூத்தாடினுலும் காரியத்தில் கண்ணுயிரு. "

என்பதொரு நல்ல பழமொழி

எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தை பட்டாலும்
முத்தர் மனமிருக்கு மோனத்தே—வித்தகமாய்
காதிவிளை யாடியிரு கைவீசி வந்தாலும்
தாதிமன நீர்க்குடத்தே தான் "

என்பது பட்டினத்தடிகளின் அமுத மொழி. இக் கருத்துக் கிணங்க, நாம் எந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்த போதிலும், நமது குறிக்கோள் எதுவோ, அதை மறந்துவிடக் கூடாது. நமது நல்வினைப் பயன் எங்கெங்கு ஒளிந்திருக்கின்றதென்று கண்ணுங் கருத்துமாய் முன் எச்சரிக்கையுடன் ஆராய்ந்து வைத்துக் காலம் வரும்பொழுது கொக்கைப்போல் நமது நல்வினைப் பயனை மீனைப் பிடித்துண்ண வேண்டும்,

" கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து. "

இதன்பொருள், 'ஒருவன் வினைமேற் செல்லா திருக்குங் காலத்து, கொக்கு இருப்பதுபோல் இருக்க வேண்டும். மற்று வினை மேற் செல்லுங் காலத்து அக் கொக்கானது தன் வினையை விரைந்து செய்து முடிப்பது போலத் தான் எடுத்த செயலைச் செய்து முடிக்க வேண்டும்.' என்பது.

பலர் ஒரு காலத்தில் தமக்கிருந்த அரிய வாய்ப் புக்களைப் பயன்படுத்திக்கொள்ளாமல் விட்டுவிட்டுப் பிறகு "ஐயையோ முன்னரே கருத்துடன் செய்திருந் தால், இவ்வளவு பணம் வந்திருக்குமே! அது செய்யத் தவறியதினுல் இவ்வளவு பணம் போயிற்றே" என்று வருந்துவதைக் கண்டிருக்கிறோம்; கேட்டு மிருக்கிறோம். இப்படி வருந்துவதற்குக் காரணம் செயலில் கண் வைக்காத குற்றமேயாகும். எனவே, மாணவர்கள் இவை போன்ற திறமை நுட்பங்களை என்றும் மறக்காமல் கருத்தில் வைத்துத் தொழில் புரிய வேண்டும்.

ஒருவன் திறமையான மனிதனுக ஆகவேண்டு மானுல், அவன் தான் செய்யும் தொழிலைக் கண்ணுங் கருத்துமாய்ச் செய்தல் வேண்டும். அத்தொழிலைப் பொருத்த அறிவுகளைக் கூடுமான அளவு கற்றறிதல் வேண்டும். மேலும் அதனை எல்லாரும் செய்கிற பழைமையிலேயே செய்துகொண்டிராமல், தன் அறிவை ஆழச் செலுத்திப் புதிய வகை கண்டு பிடித்துத் தன் செயலில் ஒரு புத்தமைப்புத் தோன் றும்படி செய்தல் வேண்டும்.

ஒரே தன்மையான தொழிலைப் பலர் செய்கிறார்கள். ஆனால், அத்தொழிலால் வரும் வருமானம் எல்லாருக்கும் ஒரே தன்மையாக இருப்பதில்லை. சிலருக்கு மிகுந்த பணமாக்கம் உண்டாகிறது, சிலருக்குப் பணமாக்கம் குறைகிறது. வேறு சிலருக்குப் போட்ட பணத்திற்கும் கேடு வருகிறது. இவற்றிற்குக் காரணம் அத்தொழிலைச் செய்கிறவருடைய திறமையின் வேறுபாடே யாகும். ஒரே சமமான பட்டம் பெற்ற வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், பொறி நுணுக்கக்கலை வல்லுநர்கள் இன்னோரன்ன தொழிலாளர்கள் செய்யும் தொழில்களிலும் பெறுகின்ற வருமானங்களிலும் ஒற்றுமை இருப்பதில்லை. படிப்பு ஒற்றுமை இருந்தபோதிலும் செய்திறன் வேற்றுமை இருக்கின்ற காரணத்தால், அவர்கள் அடையும் ஊதியத்திலும் வேற்றுமைகள் ஏற்படுகின்றன.

மேல் நாடுகளில் உழவன் அளவுகடந்த விளைபொருளை ஆக்குதல் செய்து உலக சந்தையில் விற்று ஏராளமான ஊதியம் அடைந்து உயர்ந்து வருகின்றான். நம் நாட்டு உழவனோ ஏருக்கு எருதுகள் வாங்கப் பணமில்லாமல் நிலத்தை அடமானம் போடுகின்றான்; அல்லது நிலத்தையே விற்றுவிட்டு மற்றொருவரிடத்தில் வாரத்திற்குப் பயிரிடுகிறான். இப்படியே மேல் நாட்டுத் தொழிலாளியை எடுத்துக் கொண்டாலும், அவனும் பெரிய பெரிய தொழிலில் ஈடுபட்டு உலகம் முழுவதும் விரும்பக்கூடிய பொருள்களை ஆக்குதல் செய்து பெருத்த ஊழியம் அடைகிறான். இதற்கு எதிர்மாறாக நம் நாட்டுத் தொழிலாளி நம்மவர்களே விரும்பாத தரம் தாழ்ந்த

பொருள்களை ஆக்குதல் செய்து அவற்றை வாங்குவாரில்லாமல் முதலுக்கே மோசம் தேடிக்கொள்ளுகிறான். ஏனிந்த வேற்றுமை? இதற்குப் போதிய முதற்பொருளில்லாமை, இயந்திர உதவியில்லாமை, அரசியலார் உதவியில்லாமை போன்ற காரணங்கள் ஒரு புறமிருக்க, உழைக்குந்திறனின்மை, ஆராய்ச்சித் திறனின்மை, வினைசெய்யுந் திறனின்மை, கூட்டுறவு முறையில் பழக்கமின்மை ஆகியவைகளுமே இவற்றிற்கு முதன்மையான காரணங்களாகும். ஆதலால், நம் நாட்டு உழவர்களும் தொழிலாளர்களும் இத் திறமைகளை யெல்லாம் உடையராதல் வேண்டும்.

இன்னும் திறமைகளை ஆராய்ந்தால் குலம், கொள்கை, பற்று முதலியவைகளை விட்டுக்கொடுக்கும் திறமை, செயலுக்கு முந்திக்கொள்ளுந் திறமை, செயலை அழகுபடச் செய்யுந் திறமை, செயலைக் குற்றமறச் செய்யுந் திறமை, செயலை விடாமுயற்சியோடு செய்யுந்திறமை, செயலைக் குறைந்த செலவில் துரிதமாய்ச் செய்யுந் திறமை என்றெல்லாம் அளவுக் கடங்காமல் போய்க்கொண்டே யிருக்கும். எல்லாத் திறமைகளையும் ஒருங்கே எடுத்துக்கூற எவராலும் இயலாது. ஆனால், செய்வோரது திறமை, அறிவு, பழக்கம், காலம், இடம், சூழ்நிலை முதலியவற்றிற்குத் தகுந்தவாறு அவை அமையும். ஆகவே, ஒவ்வொருவரும் பொதுவாக இங்குக் கூறப்பட்ட சில திறமைகளை அறிந்துகொண்டு அறிவைப் பயன்படுத்திச் சூழ்நிலைக்குத் தகுந்த திறமையுடன் நடப்பார்களேயானால், அவர்களது முயற்சிகள் எளிதில் கைகூடு மென்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை. தனித் திறமையுடன் செயல்புரிவதைவிட

கூட்டுறவு முறையில் செயல் புரிவது மிகவும் நன்மையளிக்கும்.

பிறநாட்டினர் தொழில் முறைகளை ஆராய்ந்தால் அவர்கள் பெரும்பாலும் கூட்டு முறையிலேயே வியாபாரம் செய்கின்றனர். ஒரே கம்பெனியார் பல துறையில் வியாபாரம் செய்து ஏராளமான பணம் திரட்டுகின்றனர். அவர்களைப் பின்பற்றி சமீப காலத்தில் நம் நாட்டினரும் கூட்டு முறையில் தொழில்கள் ஆரம்பித்து வருகின்றனர்.

## 11. துணிவு

மனிதனுள்ளத்தே குடிகொண்டிருக்கும் அச்சம் அகன்ருல்தான் அவனுக்குத் துணிவு பிறக்க இட முண்டாகும். அச்சமுள்ளவன் செயலில் இறங்கு வதற்கே துணிவுகொள்ளான்; ஒருவேளை அஞ்சும் நெஞ்சத்தோடே செயலில் இறங்கிஞலும் அச்சத்தின் காரணத்தால் செய்யுஞ் செயலை முழுவன்மையோடு செய்யவியலா திடர்ப்படுவான். ஆகையிஞல்தான் "அச்சமுள்ளடக்கி அறிவகத்தில்லாக் கொச்சை மக்களைப் பெறுதலின், அக்குடி எச்சமற் றேமாந் திருக்கை நன்று' என்று கூறியுள்ளார் அதிவீரராம பாண்டியர்.

அஞ்சுதலிஞலேயே பலருடைய திறமை ஒளிரு வதின்றி மங்கிப்போகிறது. சிலருக்கு எளிதில் பொருளாக்குதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கலாம். அவர்கள் அத்துறைகளில் இறங்கிச் செயல்பட துணிபு இல்லாமையால் நசிந்து போகிருர்கள். சில இளைஞர்கள் வெளியூர் சென்று வேலை செய் வதால் நல்ல ஊதியம் கிடைப்பதாக இருந்தாலும் உள்ளத் துணிவில்லாமையால், அவ்வரிய வாய்ப்பை விட்டுவிட்டு உள்ளூரில் வரும் சொற்ப வருமானத்தை வைத்துக்கொண்டு வாடுகிருர்கள். வணிகர்கள் சிலர் உள்ளூரில் பல போட்டிகளுக் கிடையே குறைந்த ஊதியத்தில் நடத்தும் வாணிபத்தை வெளியூரில் கிளையமைத்தால் பெருத்தஊதியம் கிடைக்குமென்று நன்கறிந்தும் அச்சம் காரணமாக பெரும் பயனை

எய்தாது இருக்கின்றனர். ஆண்களாய்ப் பிறந்தவர்கள் ஒருபோதும் அஞ்சலாகாது. அஞ்சினல், பணப்பெருக்கம் எவ்வாறு கிட்டும்? நம் நாட்டில் தான் இவைபோன்ற தயக்கங்கள் பலருக்கு உண்டாகின்றன. மேனுட்டவரை நினைத்துப் பாருங்கள். அவர்கள் எத்தனை ஆயிரம் கல்களுக்கு அப்பாலாயினும் பிற நாடுகளுக்குச் சென்று பணந் திரட்டத் தயங்குவதில்லை. இவர்களைப் போன்று நாமும் துணிவு கொள்ளவேண்டும்.

"அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வி பூத்தலின் பூவாமை நன்று" என்று புகல்கின்ருர் குமரகுருபரர். நம் திருவள்ளுவரோ அஞ்சுகிறவனைப் பேடி என்ற இழிந்த சொல்லால் இழித்துக் கூறுகிருர்.

"பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து
அஞ்சுமவன் கற்ற நூல்"

இதன்பொருள், 'சொல்லுவதற்குச் சென்று சொல்லக் கூடிய அவையும் வாய்த்து, அவ்வையின் நடுவில் அவ்வவையினுள்ளாரைக் கண்டு சொல்வதற்கு அஞ்சுகின்ற ஒருவன் கற்றநூல், பகைவர் நடுவே சென்று எறிவதற்குத் தாங்கிய வாளினை எறிவதற்கில்லாது அஞ்சுகின்ற பேடி பிடித்த கூர்மையுடைய வாளினையே ஒத்திருக்கும்' என்பது,

நன்கு கற்றறிந்த தமிழறிஞர்கள் பலர் சிறப்படையாது இருந்ததற்கும், இருப்பதற்கும் காரணம் துணிவின்மையே என்று கூறலாம். குறைந்த வருமானமே தரும் ஆசிரியத் தொழிலைத் தவிர வேருெரு தொழிலை ஏன் அவர்கள் செய்யத் துணிவதில்லை? நன்னூலைப் பார்த்தும் இராத தமிழ் எழுத்தாளர்கள் பலர் எவ்வளவு கட்டுரைகள்!

எவ்வளவு நூல்கள் எழுதி எவ்வளவு சிறப் படைகிருர்கள்! எவ்வளவு பணம் ஈட்டுகிருர்கள்! இதற்கு அடிப்படைக் காரணம் அவர்களிடம் உள்ள துணிவல்லது வேறு துணை யாது? அறிவாளிகள் ‘துணிவின்மையால் தம்மறிவின் திறன் யாருக்கும், பயனின்றி அழிந்துபோகலாமா என்பதனை நன்கு எண்ணிப் பார்க்கவேண்டும்.

“சிலர் தங்களது வயது, பிறரது உதவியின்மை, சேய்மை இடங்களுக்குப் போவதிஞல் உடல்நலம் இயைந்து வருமோ என்பன போன்ற பல அச்சங் களைத் தாமே வரவழைத்துக்கொண்டு துணிவு குன்றிப் பிற்போக்கடைகிருர்கள். நமது செயலுக்கு அடிப்படைக் காரணமாக இருப்பன அவா, நினைவு, முயற்சி, துணிவு முதலியவைகளே யன்றிப் பிற அல்ல என்பதை இவர்கள் உணர வேண்டும். நாம் மன எழுச்சி யோடிருந்தால், எந்த ஒரு செயலையும் மிகத் திறமையோடு செய்ய முடியும். டாக்டர் ஜி. யூ. போப், பெஷ்கி போன்ற அறிஞர்கள் தங்கள் முதுமைக் காலத்தில் தான் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து நம் நாடு வந்து முனைந்து மும்முர மாகத் தங்கள் வேலைகளைச் செய்திருக்கிருர்கள். அவர்களது அரிய செயல்களே அவர்களுக்குப் புகழ் தேடிக் கொடுத்துள்ளன.

எந்தத் தொழிலைச் செய்வதாக வைத்துகொண் டாலும் அதன் முடிவு எப்படி ஆகும் என்பதை நாம் முன்ஞல் திட்டவட்டமாகத் தெரிந்துகொள்ள முடி யாது. ஆஞல், நல்ல முடிவு, தீய முடிவு என்ற இரண்டினுள் ஏதேனும் ஒன்று வந்துதான் ஆக வேண்டும். ஆகையிஞல், வினை செய்வோர், தீய

முடிவுகள் வந்தாலும் தாங்கத் தயங்கோம் என்ற துணிவுள்ளத்தோடு செயலில் இறங்க வேண்டும்.

"துன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி
யின்பம் பயக்கும் வினை."

இதன்பொருள், 'வினையைச் செய்பவன் தான் செய்யும் வினையில் முதற்கண் மெய் முயற்சியினால் தனக்குத் துன்பம் வருவதாகக் காணப்படினும், அத் துன்பத்திற்காகத் தளர்ச்சியடையாது, அவ்வினை முடிவின்கண் உண்டாகும் இன்பம் ஒன்றையே கருதித் துணிவோடு எடுத்த செயலைச் செய்தல் வேண்டும். இவ்வாறு துணிவுள்ளம் படைத்தவர்களே உலகில் பெரும்பாலும் விரைவில் முன்னுக்கு வருதலைக் காணலாம். சில மாதங்களுக்கு முன் இமயமலை முகட்டை அடைந்துவிட்டுவந்த டென்சிங் என்பவரைப்பற்றி எல்லோருமே அறிவர். அந்த வீரர் அடைந்த புகழுக்கும் போற்றுதலுக்கும் பெற்ற பரிசுகளுக்கும் பணமுடிப்புகளுக்கும் எல்லாம் காரணம் அவருக்குண்டான இறப் பஞ்சாத் துணிவு என்பதல்லால் வேறெதைச் சொல்ல முடியும்?

நிற்க துணிவு வேண்டுமென்று கூறியதனால் ஒருவரும் நன்கு ஆராயாது ஒரு செயலில் இறங்கி விடக்கூடாது. துணிவு இன்றியமையாமல் வேண்டற்பாலதுதான். ஆனால், உள்ள பொருளுக்கே கேடு வரினும் அதனைத் தாங்கிக்கொள்ளும் திறமையுள்ளவர்களே தளர்ச்சி யடையாத் துணிவு முறையைக் கையாள வேண்டுமே யொழிய ஏனையோர் இம்முறையைக் கையாள்வது தவறாகும்.

## 12. துணைக்கோடல்

வாழ்க்கையில் முன்னேறியுள்ள பலருடைய வரலாறுகளை ஆராய்ந்து பார்த்தால், அவர்கள் பிறிதொருவரின் துணைகொண்டு முன்னேறி யிருக்கின்றனர் என்பது புலப்படும். பிறருடைய செல்வாக்கையும் சிபாரிசையும் துணையாகக் கொண்டே சிலர் நல்ல வேலைகளைப் பெற்று விடுகிருர்கள். வணிகர்களும் சிலருடைய துணைகொண்டே வாணிபத்தில் உயர் நிலை யெய்துகின்றனர். இன்னும் பல்வேறு துறைகளில் இருப்பவர்களுங்கூடப் பிறர் துணைகொண்டே தத்தம் நோக்கத்தில் வெற்றியடைகிருர்கள். ஆகையினுல் பொருளாதாரத்திற்குத் துணைக்கோடலும் நல்ல துணை செய்யும் என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

> " முதலிலார்க்கு ஊதியம் இல்லை மதலையாஞ்
> சார்பிலார்க்கு இல்லை நிலை."

இதன் பொருள், 'முதற்பொருள் வைத்துத் தன்னுடைய வர்த்தகத்தைச் செய்யாத வர்த்தகன் ஒருவனுக்கு எவ்வாறு ஊதியம் கிடைப்பதில்லையோ, அதுபோலத் தன்னைத் தாங்கிக் கூறவேண்டுவனவற்றைக் கூறி ஒழுகவேண்டிய வழியில் ஒழுகச் செய்யும் பெரியோரைத் துணையாகக் கொள்ளாத ஒருவனுக்கு அவன் தாங்கும் ஏதொன்றையும் நிலையாகத் தாங்க முடியாது' என்பது.

எனவே, ஒருவர் எவ்வளவுக் கெவ்வளவு மிகுதியான நண்பர்களையும் துணைவர்களையும் தேடிக்கொள்

ளக் கூடுமோ, அவ்வளவுக் கவ்வளவு மிகுதியான நண்பர்களையும் துணைவர்களையும் தகுந்த காலங்களில் பெற்றுத் தகுந்த பயன் அடைதல் வேண்டும்.

நம் நாட்டில் உறவின் முறையார்கள் எல்லாரும் ஒரே செல்வநிலை உள்ளவர்களாக இருக்கமாட்டார்கள். சிலர் பணக்காரராயிருப்பர். சிலர் ஏழையா யிருப்பர். ஏழையா யிருப்பவர் ஒவ்வொருவரும் தமது பணக்கார உறவினரை அணுகி அவருடைய துணையைப் பெற்றுக் கொஞ்சங் கொஞ்சமாகத் தலை தூக்க முற்படவேண்டும். பணக் காரராக உள்ள உறவினரும் தம் உறவினர்பால் அன்பும் இரக்கமும் கொண்டு அவருக்குத் தம்மா லியன்ற துணைபுரிதல் தம் கடமை எனக் கொண்டு செய்தல் வேண்டும். இருபாலாரும் இப்படி நடந்து கொண்டால் அதிக நன்மை யடையலாம். பல குடும்பங்கள் தலை தூக்கும், செல்வ நிலை உயரும். நண்பர்களாயிருப்பவர்களுக்கு இதே போன்ற உள்ளப்பாங்கு உண்டாகுமாயின், அவர்களாலும் பல குடும்பங்களின் நிலை உயரும், அதனால், நாட்டு மக்கள் முன்னேற்றமடைவர்; நாட்டுப் பொருளா தாரமும் செழித்து மேம்பாடடையும்.

இன்னும், நினைத்துப் பார்த்தால், ஒருவன் பெற் றுள்ள செல்வத்துக்கும் முன்னேற்றத்துக்கும் அவ னுடைய தந்தையே பெரும்பாலும் துணைபுரிபவர் எனவும் கூறலாம். பிள்ளையைப் பத்துத் திங்கள் சுமந்து பெற்று வளர்க்கிற அளவோடு நின்றுவிடு கிறது தாயின் கடமை. மற்றப்படி மகனுக்குக் கல்வி அறிவு, ஒழுக்கம், செல்வம் முதலியவற்றைப் பெற வகை செய்பவர் தந்தையே ஆவார். இதனை

"ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே."

என்று புறநானூறு கூறுகிறதினாலும் அறியலாம். நல்லதொரு தந்தையின் நோக்கமும் ஏக்கமும் தன் மகனுடைய முன்னேற்றத்தைப் பற்றியே யிருக்கும்; இருக்கவும் வேண்டும். எனவேதான் பலருக்குப் பணமாக்குதலைப்பற்றிய நினைப்புக்கு இடம் இல்லாத படி அவர்களின் தந்தையர்கள் பிள்ளைகளுக்காக முன்னதாகவே ஓர்ந்து பாடுபட்டு ஏராளமான பொருளைத் தேடி வைத்துவிட்டுப் போகிறார்கள். இப்படித் தந்தையர்களாய் இருப்பவர்கள் அனைவரும் தம் தனையர்களுக்காகப் பொருளாக்கி வைக்க முயல்வதுடன், அவர்கள் தம் தனையர்களைப் பொருள் திரட்ட தகுதியுடையவராகச் செய்தும் உதவுகின்றனர்.

இக்கருத்தினைத் திருக்குறளில் புதல்வரைப் பெறுதல் என்னும் அதிகாரத்துள்

"தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்."

என்ற குறளில் தந்தை புதல்வனுக்குச் செய்யும் நன்மையாவது, கற்றோர் சபையில் யாவரினும் மிகுந்த அறிவுடையவனாய் இருப்பதற்கு வேண்டிய கல்வியைப் பயிற்றுவித்தல் என்ற பொருளைப் பார்த்தால் தந்தையின் கடன் மகனுக்குக் கல்வியைப் பயிற்றுவித்தலோடு நின்றுவிடுகிறது. ஆனால் அது செல்வத்தைச் சேர்த்து வைக்க வேண்டாவென்று மறுத்துக் கூறவில்லை. ஆதலின், கல்வியைப் பயிற்றுவித்தல் போலவே செல்வத்தையும் சேர்த்துவைத்தல் தந்தையின் கடமையாகக் கொள்ளுதலில் தவறெதுவும் வந்துவிடும் என்று நினைப்பதற்கில்லை.

இக்குறளுரையில் பரிமேலழகரோ "பொருளு டைய னுக்குதல் முதலாயின துன்பம் பயத்தலின் நன்மையாகா வென்பது கருத்து என்று குறிப்பிடு கிறார். இந்தக் கருத்தை அவர் எப்படிக் கல்லி எடுத்தார் என்பது விளங்கவில்லை. இந்தக் கருத்துப் புலப்படு வதற்கு மூலத்தில் எந்த ஒரு சொல்லையும் காணேம். பொருளுடைய ஞக்குதல் முதலாயின என்ன துன்பம் பயக்கும் என்பதையும் அவர் விளக்கக் காணேம். ஒருவேளை திருவள்ளுவருக்குப் பொருள் துன்பம் பயக்கும் என்பது கருத்தாயின்,

"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள்"

என்றும்,

"செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூறியது இல்"

என்றும்,

"ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு"

என்றும்

இதே திருக்குறளில் வேறிடங்களில் பொருளைச் சிறப் பித்துச் சொல்லியிருக்கமாட்டாரே என்றெல்லாம் நினைக்கத் தோன்றுகிறது. ஆகையினுல், தந்தைய ராவோர் தம் தனையருடைய நல்வாழ்விற்காகக் கல்வி பயிற்றுவித்தலாகிய கடமையோடு மட்டும் அமர்ந்து விடாமல், கூடுமானல் சிறிது காசும் தேடி வைத்தல் பெருந் துணையாய் இருக்கு மென்று துணிந்து கூறலாம். ஒவ்வொருவரும் தங்கள் சந்த திக்குப் பொருளைச் சிறிது சேர்த்து வைக்கவேண்டும் என்பதைக் கடமையாகக் கொள்ள வேண்டும்.

இக்காலத்தில் கற்ற கல்வி ஒன்றின் துணையை மட்டும் கொண்டு ஒருவன் எளிதில் முன்னுக்கு வந்து விட முடியாது. எந்தத் தொழிலுக்கும் முதற் பணம் வேண்டும். உத்தியோகம் பார்ப்பது எனத் தீர்மானித்த ஒவ்வொருவருக்கும், அது கிடைக்கும் வரை பணம் வேண்டியிருக்கிறது. தந்தை தனக்கென ஒரு சேமிப்பை வைத்துவிட்டுச் சென்றிருந்தால் தனயன் அச் சேமிப்பைத் தன் தொழிலுக்கு முதற் பணமாக்கி எளிதில் முன்னுக்கு வரலாம் அல்லவா? மேலும் பண மாக்கலாம் அல்லவா? ஒரு முதற் தொழிலுக்கு மட்டுமன்று ஒரு துணைத் தொழிலுக்கும் தந்தையின் முதற் பணமே முதலாவதாகப் பயன்படுகிறது. கல்வி, அறிவு, திறமை ஆகியவை இரண்டாவதாகத்தான் பயன்படுகின்றன.

இனிப் பிள்ளைகளை எடுத்துக்கொண்டால் அவர்கள் தமக்குப் பொருளாக்கம் உண்டாவதற்கு என்னென்ன முறைகள் என்று ஆராய்ச்சி செய்வதற்குமுன், தமது தந்தையார் ஏதேனும் பணம் திரட்ட வழிகளை முன்னதாகவே வகுத்து வைத்திருக்கின்றாராவென்று எண்ணிப் பார்க்கவேண்டும். வழிகள் காட்டப்பட்டிருந்தால் அவற்றின் துணைகொண்டு முன்னுக்கு வரவேண்டும்.

சில பிள்ளைகள் தந்தை யிடத்தில் முரண்பட்டு முரட்டுத்தனமாய் நடந்து அவருடைய அன்பை இழந்துவிட்டு அவரால் பெறக்கூடிய நன்மைகளைப் பெருமல் போய்விடுகிருர்கள், சில தந்தையரும் தம் கடமையை உணராது தாம் பெற்ற மக்களிடம் விருப்பின்றி வெறுப்புக்கொண்டு அவர்களுக்கு எந்த நன்மையும் செய்ய விரும்பாது தம் பிள்ளை

களின் நல்வாழ்விற்கு ஊறு செய்கின்றனர். இவ்வாறு இரு பாலாரும் முரண்பட்டுக் குடும்பத்தைப் பிற்போக்கடைய வைக்காமல் ஒருவருக்கொருவர் துணையாக நின்று ஒற்றுமையுடன் இருந்து உழைத்து வாழையடி வாழையாய் முன்னேற வழி தேடவேண்டும்.

---

## 13. பணிவுடன் நடத்தல்

உலக மக்களைப் பணம் தேட ஊக்குவது உயர் நிலை யடையவேண்டு மென்று ஒருவர் மனத்தில் எழும் அவா ஆகும். உயர்நிலை அடைவதற்கு வேண்டப்படும் பண்புகளுள் பணிவுடன் நடத்தலும் ஒன்று. அதுவும் பிறர்மனம் வருத்தாத செய்கை சாலச் சிறந்தது. இச்செய்கையை விரும்பாதவர்கள் இதனைக் 'காக்காய்'ப் பிடித்தல் எனக் குறைவாகக் கருதுகின்றனர். ஆகவே, இதனைச் சிறிது நாம் ஆராய்வோம்.

காக்கையானது மிக விரைவாகப் பறக்கக்கூடிய ஒரு பறவை. எளிதில் அது மனிதர் கையில் சிக்கவே சிக்காது. புரு, கிளி முதலிய பறவைகளைப் பிடிப்பது போன்று அதைப் பிடிக்க முடிவதில்லை. எனவே, காக்கையை ஏமாற்றிப் பிடிப்பதோ, கவருவதோ அருமை என்ற நிலைமை உலகில் ஏற்பட்டிருக்கும் போது, எங்கோ ஒருவன் காக்கையைப் பிடிக்கிறான் என்று கேள்விப் பட்டால், அவனை யார் வியக்கமாட்டார்கள்? புகழ்ந்து பேசமாட்டார்கள்? அது போலச் சிறிதும் விட்டுக்கொடுக்காத உறுதியுள்ளம் படைத்த ஒருவரை, மற்றொருவர் பணிவுடன் நடத்தல், இச்சகம் பேசல், போன்ற வேறு சில செயல்களால் விட்டுக் கொடுக்கும்படி பண்ணுகிறார் என்பதை அறிந்தால் அவர் திறமையைக் 'காக்கை' பிடித்தலுக்கு ஒப்பாகக் கூறுகிற முறையிலே இன்னார் இன்னாரைக் 'காக்காய்' பிடிக்கிறார் என்ற தொடர் தோன்றியிருக்க வேண்டும் என்றே கொள்ளுதல் வேண்டும்.

ஆகவே, பணிவுடன் நடத்தலை, ஒருவன் தன் உயர்விற்கு வேண்டித் திறம்படச் செய்கிருன் என்ருல் அவனை நாம் குறை கூறுதல் கூடாது. உண்மையில் அவனது செயலைப் பாராட்ட வேண்டும். இம்முறையைத் தெரிந்துகொள்ளாத மக்களை உடனே தெரிந்து கொள்ளும்படியும் அறிவுறுத்தவேண்டும். மக்களுக்குள்ளே பெருமை விரும்புகிறவர்களும் மாலை விரும்புகிறவர்களும் இருக்கின்ற காரணத்தால் பணிவுடன் நடத்தலும் இச்சகம் பேசுதலும் ஓர் அளவிற்கு பண்டைக்காலம் தொட்டு நடைபெற்று வந்துள்ளது என்பது தெரிகிறது. ஆனல் இச் செய்கையைச் செய்யும்போது பிறருக்குத் தீங்கு உண்டு பண்ணுத அளவில் இதைச் செய்கிருேமா என்பதை ஒவ்வொருவரும் தீர எண்ணிச் செய்யவேண்டும்.

ஒரு முதலாளியிடத்தில் இரண்டு வேலையாட்கள் இருப்பார்கள். அவர்களில், ஒருவன் படிப்பு, உறவு, திறமை முதலிய முறையான தகுதிகளைப் பெற்று உயர்வுக்கு மிகத்தகுதி உள்ளவனுக இருப்பான். மற்ருெருவன் மேற்படி தகுதிகளில் குறைந்து முதலாளிக்குப் பணிவுடன் நடக்கும் ஒரே காரணத்தினுல் தகுதியுள்ளவனுக்குப் போகவேண்டிய உயர்வைப் பெற்றுக்கொண்டு போய்விடுவான். இதைப் போன்ற செயல் தீங்கு என்றே கூறவேண்டும்.

இப்படிப் பணிவுடன் நடப்பவர்களைப் போலவே இச்சகம் பேசியும் சிலர் உயர்வடைகிருர்கள். ஒருவரை வஞ்சிக்காமலும் ஏமாற்ருமலும் இன் மொழிகளால் அவர் உள்ளத்தை இளக்கி, அதனுல் அவருக்கு நம் மேல் அன்பும் பிறந்து அவர் தாமுகவே பல வழிகளில் நமக்கு உதவிபுரியும் அளவிற்கு இச்சகம் பேசப்படு

மாயின், அது நெறி முறைக்கும் நேர்மைக்கும் மாருகாதல்லவா? அந்த வகையில் மக்கள் இச்சகம் பேசக் கற்றுக்கொள்ளுதலேயும் நாம் வரவேற்க வேண்டும்.

புகழை விரும்புவோர், கல் நெஞ்சர், கொடியவர் பகைவர், பெண்கள், அயலார் ஆகியோரிடத்தில் மெய் முன்னுக்கு வராது என்பதும், இவர்களிடத்திலெல் லாம் மெய்யே பேசுவதென்று வைத்துக்கொண்டால் பெரும்பாலும் காரியத்திற்கு இடையூறு நேருமே யன்றி, நன்மை வராது என்பதும், இவர்களே இச்சகம் பேசித்தான் வெல்லுதல் வேண்டும் என்பதும், உலகப்பழக்கம் வாய்ந்தவர்களின் கண்டு பிடிப்பாகும். ஆகையினுல், பணத்தை ஆக்கும் நோக்கம் படைத்த வர்கள் இந்தத் திறமையை மறுத்துவிடாமல் தகுந்த இடங்களில் விழிப்புடன் கையாளுவதில் குற்றமில்லே. எவரால் கருதிய செயல் ஆகவேண்டுமோ, அவ ருடைய அன்பைப் பெறும் அளவிற்குப் பிறர்க்குத் தீங் கில்லாமல் தம் காரியத்தை முடித்துக்கொள்ள வேண்டும்.

"புளுகினுலும் பொருந்தப் புளுகு", "பல பொய் சொல்லி ஒரு விளக்கேற்று". "புகலற்றவனுக்குப் பொய்தான் கை முதல்" என்று கன்ன பரம்பரையாக வழங்கப்பட்டுவரும் நம் நாட்டுப் பழமொழிகள் பொய்க்கு இடங்கொடுத்து அமைந்திருத்தல் கருதற் பாலது, வள்ளுவரும் கூட.

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்த்த
நன்மை பயக்கு மெனின்."

இதன்பொருள், 'ஒருவன் சொல்லுகின்ற பொய்ம் மைச் சொற்களால் மற்றவர்க்கு நன்மையுண்டாகு

மாயின், அவன் கூறிய பொய்யாகிய சொற்களும் மெய்ம்மைச் சொற்களின் பாலவாம் என்பது. வள்ளுவரும் பொய்க்கிடமளித்து எழுதியிருக்கிருர் என்ருல் நமக்கு வேறென்ன வேண்டும். ஆனல் மாணவர்கள் 'புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின்' என்பதன் பொருளே நன்கு சிந்தித்து இந்தப் பழக்கத் தைக் கைக்கொள்ள வேண்டும்.

பலர் பல இடங்களில் இனிய மொழிகளேப் பேசியே உயர்நிலே எய்துகிருர்கள். பணம் ஈட்டுகிருர் கள். முற்காலத்தில் நம் நாட்டுப் புலவர்களுங் கூட அரசர்களேயும், செல்வர்களேயும், வள்ளல்களேயும் புகழ்ந்து பாடிப் பணமும் பரிசும் பெற்று வாழ்ந்து வந்தார்கள் என்பதைப் பல பண்டைக்காலத் தமிழ் நூற்கள் வாயிலாக அறிகிருேம்.

எனவே, பணிவுடன் நடத்தலும் இச்சகமும் மனிதனே மனிதன் வெல்ல வல்ல மாமருந்தாகும் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து நடக்க வேண்டும்.

———

## 14. துணைத்தொழில்

ஒரு சில நோயாளிகளும் சோம்பேறிகளும் தவிர இல்வாழ்வாருள் ஒவ்வொருவரும் ஏதேனும் ஒரு தொழிலைச் செய்துதான் வருகிறார்கள்; சும்மா இருப்பதில்லை. வேலையில்லாத் திண்டாட்டத்தினால் சிலர், சிலகாலம் எந்த வேலையுங் கிடைக்காமல் வாளாயிருந்தாலும், சில நாள்களுக்குப் பிறகு அவர்களுள் ஒவ்வொருவரும் ஒரு வேலை தேடிக்கொண்டு வேலை நிகழும்தொழில் நிலையத்திற்கோ அல்லது அலுவலகத்திற்கோ சென்று தத்தம் வேலையைச் செய்து வருகிறார்கள். அப்படிச் செய்கின்ற வேலை ஒன்றோடு நின்றுவிடாமல், ஒவ்வொருவரும் வீட்டிற்கு வந்த பின்னர் வீட்டினுள்ளேயே தன்னாலாகும் தொழில் ஏதேனும் ஒன்றினைச் செய்ய முயலுதல் வேண்டும். அப்பொழுதுதான் மேலும் பணந் திரட்டல் முடியும்; வீணாகின்ற நம் ஒழிந்த நேரங்களும் பயன்படும். அவர்களுக்கு- எத்தொழில்கள் துணைத் தொழிலுக்கு ஏற்றவை என்ற கேள்வி எழலாம். ஆதலால் எடுத்துக்காட்டிற்காகச் சிலவற்றைக் கவனிப்போம்.

சாதாரண மக்களது செல்வநிலை உயர்வுக்கு துணைத்தொழில் வாய்ப்பளிக்கிறது, ஆகவே, ஓய்வு நேரத்தில் காய்கறி பயிரிடலாம், கோழி வளர்க்கலாம், ஆடு மாடு வளர்க்கலாம், ஓவியம் வரையலாம், கதை, கட்டுரைகள் எழுதலாம், மாணவர்களுக்குக் கல்வி பயிற்றலாம், டைப் அடிக்கலாம், கிழிந்து போன நூல்களைப் பழுது பார்க்கலாம், ஒலிப்பெட்டி, கடிகாரம் போன்றவைகளைப் பழுது பார்க்கலாம். இன்னும்

தச்சு வேலை, வர்ண வேலை, வார்ணிஷ் வேலை போன்ற துணைத் தொழில்களில் ஏதேனும் ஒன்றைத் தங்கள் தகுதிக் கேற்றபடி செய்யலாம்.

வாழ்வில் தாம் உயரவேண்டும் என்ற உணர்ச்சி யுள்ள சிலரே தத்தம் வருமானத்தைப் பெருக்க விரும்புகிறார்கள். எனவே, பணம் ஈட்ட வழி தேடும் மக்கள் ஒவ்வொருவரும் மேலே கூறப்பட்ட துணைத் தொழில்களில் ஏதேனும் ஒன்றைத் தொடங்குவது ஒரு நல்ல வழியாகும். ஒவ்வொருவரும் ஒரு துணைத் தொழிலை உடனே தொடங்க முடியாவிட்டாலும் 'ஒன்றைத் தொடங்கவேண்டும்" என்ற உள்ளத்து, உணர்ச்சியோடேனும் இருக்கவேண்டும். அவ்வுணர்ச்சி எப்பொழுது எந்தத் தொழிலைத் தொடங்கலாம் என்பதை அவர்களுக்குத் தோற்றுவிக்கும். "என் வருமானம் எனக்குப் போதவில்லையே? அதற்கு நான் என்ன செய்வது" என்று ஏக்கத்தோடு கேட்ட ஒருவனுக்கு, ஏதேனும் ஒன்றைத் தொடங்கு என்ற பதிலைத்தான் ஓர் ஆங்கில அறிஞன் சொன்னான் என்று அறிந்தோர் கூறுவர்.

இன்றைய உலகில் ஒரு காலத்தில் வருமானம் பற்றாது துணைத்தொழில் செய்து வந்தவர்கள் சிறிது காலத்திற்கு பின்னர் பெரும் செல்வந்தராகி யிருக்கின்றனர். செய்தித்தாள் விற்றுவந்தவன் பாங்கிப் பொறுப்பாளி யாகிவிடுகிறான். முப்பது ரூபாய் சம்பளத்தில் ஆசிரியராக, குமாஸ்தாவாக இருந்தவர்கள் திங்களுக்கு முன்னூறு மூவாயிரம் ஆகப் பணத்தைப் பெறும் முதலாளி ஆகிவிடுகின்றனர். காலணா செலவிட விரும்பாது காலில் நடந்து போய்க்கொண்டிருந்தவனைத் திடீரென்று காரில் போகப் பார்க்கிறோம்.

கார்பழுது பார்த்து வந்தவர்களும் கார் ஓட்டியாக யிருந்தவர்களும் பெரிய கார் கம்பெனி முதலாளி யாகி விடுகின்றனர். இவ்வண்ணம் ஒருவர் வாழ்க் கையில் வியக்கத் தக்க அளவில் உயர்வதற்குக் காரணம் "நாம் இதைத் தொடங்கலாம்" "நாம் இதில் ஈடுபடலாம்" என்று துணிந்து ஒரு செயலைத் தொடங்கியதேயாகும். வாழ்க்கையில் உயர்வடைந் துள்ளவர்கள் அவர்கள் செயல்களைத் தொடங்கும்போது நமக் கிவ்வளவு பெரிய உயர்வுகள் வரும் என்றே எதிர்பார்த்திருக்கமாட் டார்கள். எனினும், அவர்கள் செய்த தொடக்கங்கள் அவர்களுக்கு அவ்வளவு பெரிய உயர்வுகளைக் கொண்டுவந்து கொடுத்திருக்கின்றன. துணைத் தொழிலின் உயர்வையும் மேன்மையையும் ஒவ்வொரு வரும் உய்த்துணர்ந்து ஏதேனும் ஒன்றைத் தொடங்க வேண்டும். அப்படித் தொடங்கினல் அவர்களுக்குத் திண்ணமாக நன்மையே வந்து சேரும்.

மூளையின் வன்மை, உடல் வன்மை, கைவன்மை மற்றும் இவைபோன்ற திறமைகளில் ஏதாவது ஒன்று ஒவ்வொருவரிடமும் அமைந்திருக்கும். எந்த வகையான ஆக்க வேலைக்காளுலும் இவற்றில் ஒன்று தேவை என்பது உண்மை. ஆகவே, ஒருவன் ஒரு செயலைத் தொடங்கி அச்செயலின் வாயிலாக அவ னது திறமைக்குத் தொழிற்படும் வாய்ப்பளித்தல் வேண்டும். ஆகவே மாணவர்கள் மறந்துவிடாமல் மூளையின் வன்மை முதலியவற்றைத் துணைத் தொழில் களிலும் பயன்படுத்திப் பணப்பெருக்கந்தேட நீங்கள் ஒவ்வொருவரும் முயலவேண்டும்.

# 15. விளம்பரம்

பணமாக்கம் உண்டாவதற்குக் கையாள வேண்டிய வழிகளுள் விளம்பரஞ் செய்கின்ற முறையும் ஒன்ருகும். பொருள்களை உண்டு பண்ணுகின்றவர்களாகட்டும், விற்பனை செய்கின்றவர்களாகட்டும், தொழில் வல்லுநர்களாகட்டும், தொழிலாளர்களாகட்டும், நடுத் தகுதி ஊழியர்களாகட்டும், உயர் தகுதி அலுவலாளர்களாகட்டும் தங்களுடைய பொருளின் சிறப்பை அல்லது அறிவின் திறமையைப் பலரறிய விளம்பரப்படுத்திஞல்தான் தக்க பயன் பெற முடியும். பொருள்களின் சிறப்பு, தகுதி, விலை விவரம் முதலியவற்றை விளம்பரங்கள் எடுத்துக் காட்டுவதிஞல் பொருள்களை வாங்குகிறவர்களின் தொகை வளருகிறது. வாங்குகிறவர்களின் தொகை வளருவதிஞல் விற்பனை வளருகிறது, விற்பனை வளருவதிஞல் பொருளுற்பத்தியாளருக்கு ஊதியம் வளருகிறது. ஆகவே, வர்த்தகத்துறையில் ஊதியம் வளருவதற்கு விளம்பரம் செய்தாகவேண்டும்.

ஒருவரிடத்தில் சம்பளத்திற்கு வேலை செய்யும் ஊழியர்களும் தங்களைப் பற்றிச் செய்யக்கூடிய விளம்பரங்களும் உண்டு என்று நாம் கூறும்போது நீங்கள் ஒருவேளை வியப்படையலாம். ஆஞல் உண்மையில் இவர்களுள்ளும் சிலர் சில விளம்பரங்களைச் செய்துதான் சம்பள உயர்வு, தகுதி உயர்வு ஆகியவைகளைப் பெறுகிருர்கள். கிழிந்து நலுங்கி அழுக்கேறிய உடைகளை ஒழித்துத்தள்ளி தூய

உடைகளை அணிந்து கொண்டு ரம்மியமான முறையில் அலுவலகத்திற்குச் செல்லல், எப்பொழுதும் சுறு சுறுப்பாக வேலைகளைக் கவனித்தல், கேட்பவர்களுக்கு பணிவுடன் இனிய பதில் அளித்தல் ஆகிய நல்ல பழக்க வழக்கங்களை மேற்கொள்ளுதலே இவர்கள் செய்யவேண்டிய விளம்பரங்களாகும்.

இனி வர்த்தகத்துறை விளம்பரங்களை ஆராய்வோம். வர்த்தகத்துறையில் விளம்பரங்களெல்லாம் பொதுவாகப் பத்திரிகைகள் வாயிலாகவும், சுவரொட்டிகள் வாயிலாகவும், வினியோகஸ்தர்கள், விற்பனையாளர்கள் மூலம் நேருக்கு நேர் எடுத்துச் சொல்லுதல் வாயிலாகவும் செய்யப்படுகின்றன. தவிர பென்சில், பேனா, பேனாக் கத்தி, காலண்டர், கைக்குட்டை, துணிப்பை, தோல்(பணப்)பை, தீப்பெட்டி போன்ற மக்கள் அன்றாடம் கையாளும் குறைந்த விலையுள்ள பொருள்களில் விளம்பரங்களைத் தீட்டி அப்பொருள்களை விலையின்றி வழங்குவதின் வாயிலாகவும், விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. இவ்வாறு பரந்து கிடக்கும் விளம்பர முறைகளைச் செய்யும்போது வர்த்தகர்கள் கண்ட கண்டபடி செய்தால் எதிர்பார்த்த பயன் உண்டாகாமல் போய்விடும்.

விளம்பரஞ் செய்கின்ற முறையிலும் சில நுட்பங்கள் இருக்கின்றன. அந்நுட்பங்களை அறிந்து செய்தல்வேண்டும். விளம்பரத்தின் ஓவியம், உரை நடை ஆகியவைகள் காண்போர் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் வகையில் அமையவேண்டும். விளம்பரங்களை ஒரு பத்திரிகைக்கு அனுப்புவதென்றால் அந்தப் பத்திரிகைக்கு மிகுந்த எண்ணிக்கை

விற்பனை இருக்கின்றதா என்றும், அதை உள்ளூரி லும், வெளியூர்களிலும் வாங்குவோர்களின் தன்மை அறிந்தும் அனுப்பவேண்டும். சுவரொட்டி விளம்பரங் களை ஒட்டுவதும் துண்டு விளம்பரங்களை வழங்கு வதும் மக்கள் மிகுந்த அளவில் கூடும் புகைவண்டி நிலையம், தபால் நிலையம், கண்காட்சி நிலையம் போன்ற இடங்களாகப் பார்த்து செய்தல்வேண்டும். வாய் விளம்பரங்களை வர்த்தகப் பேச்சுவன்மை வாய்ந்த தகுந்த ஆட்களைக் கொண்டு நேரிலும் வானொலி வாயிலாகவும் செய்வித்தல் வேண்டும்.

இந்த வழிகளிலெல்லாம் விளம்பரங்களை மட்டும் செய்து விட்டால் போதாது. விளம்பரங்களின்படி விளம்பரப் பொருள்களின் தகுதியும், விளம்பரம் செய் கின்றவர்களிடத்தில் நாணயமும் இருக்க வேண்டும். தம் பொருளை ஒருமுறை வாங்கியவர் மற்றும் பல முறை வாங்க வேண்டும், அவர் தனக்குத் தெரிந்த பிறரையும் வாங்கச் சொல்ல வேண்டும் என்ற கருத்துக் கொண்டு உற்பத்தியாளர்கள் தங்கள் பொருளின் தரத்தை உயர்த்த வேண்டும். அவ்வாறு செய்வதினால்தான் விற்பனை வளரும்.

விளம்பரஞ் செய்யும் முறைகளைக் கையாண்டு தான் மேல் நாட்டவர் தம் வர்த்தகத்தை வளர்த்து நம் நாட்டிலிருந்தும் பிற நாடுகளிலிருந்தும் ஏராள மான பணத்தைத் திரட்டிக்கொண்டு போனார்கள். இன்றும் கொண்டு போகிறார்கள். அவர்கள் நாடு பொருளாதாரத்தில் மேன்மை யடைந்துள்ள தற்கு ஒரு காரணம் அவர்கள் விளம்பர முறைகளை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகப் பல புதியவகைகளில் வளர்த்து வருவதேயாகும்.

அவர்களைப் பார்த்துத்தான் நம்மவர்களும் வியாபாரத்திற்கு விளம்பரம் இன்றியமையாதது என அறிந்தனர். ஆனால் இப் படிப்பினையினை எல்லாரும் கற்றுக் கொள்ளவில்லை. ஒரு சிலரே அதுவும் ஓரளவே கற்றிருக்கிறார்கள். பலர் இப் படிப்பினையை இன்னும் பெறாத காரணத்தினால் தாம் தொடங்கிய தொழிலில் தகுந்த ஊதிய மடையாமலிருக்கிறார்கள். எடுத்துக் காட்டிற்காகக் குறிப்பிடுவன: நம் நாட்டுக் கைத்தறித் துணிகள் கட்டுக் கட்டாக மலைபோல் தங்கிக் கிடப்பதற்கும், சில சிறந்த நாட்டு மருந்துகளைப் பலர் அறியாமலிருப்பதற்கும், பல வகைக் காரணங்கள் உண்டெனினும், அவற்றுள் தகுந்த விளம்பரம் இன்மையே முதற் காரணமாகு மென்பதனை யாராவது மறுக்க முடியுமா? முடியாது.

> "எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
> திண்ணியர் ஆகப் பெறின்."

எனவே, ஒரு தொழிலைத் தொடங்குங் காலத்தே அதற்கு வேண்டிய மூலதனத்தை மதிப்பிடும் போது அத்தொழிலுக்காகச் செய்யவேண்டிய விளம்பரச் செலவையும் சேர்த்து மதிப்பிட்டு விளம்பரத்திற்கென ஒதுக்கிய அத்தொகையை விளம்பரத்திற்கே செலவழித்து வெற்றி காணுதல் வேண்டும்.

மேல்நாட்டவர்களின் விளம்பர முறையை இன்று நம் நாட்டுச் சினிமாப் படமுதலாளிகளே கையாளுகிறார்கள் எனக் கூறலாம். அவர்கள் படம் எடுக்கச் செலவழிக்கும் தொகைக்குச் சமமான ஒரு பெருந் தொகையை விளம்பரத்தில் செலவு செய்கின்றனர். ஒரு படம் பிடிக்கத்திட்டமிட்ட தினத்திலிருந்தே அவர்கள் விளம்பரம் செய்வதைப் பத்திரிகையில்

காணலாம். எனவே, பணமாக்குதற்கு விளம்பர முறையை எந்த அளவிற்கு அவர்கள் கையாளுகிருர்கள் என்பது நன்கு விளங்குகிறது. பல ஆயிரங்கள் மூலதனம் போட்டு ஒரு படம் எடுக்கிருர்கள். பலவித விளம்பரங்கள் மூலம் மக்களிடையே ஆவலை உண்டு பண்ணுகிருர்கள். விளம்பரங்கள் காரணமாகவே படம் வெளி வந்த சிறிது காலத்திலே பட முதலாளிகள் பெரும் லாபத்தை அடைகிருர்கள். ஏராளமான மூலதனத்தைக் கொண்டு நடத்தும் தொழில்களுக்கு எல்லாம் விளம்பரமே முதன்மையாக வேண்டப்படுவது.

விளம்பரத்திற்காகப் போடப்படும் அழகிய அட்டைப் படங்கள் காரணமாகவே சில கதைப் புத்தகங்களும், சில பத்திரிகைகளும் பெருத்த அளவில் விற்பனையாகின்றன. எனவே, ஒவ்வொருவரும் விளம்பர முறையை நன்கு பயன் படுத்திக் கொள்ளவேண்டும்.

## 16. அரசாங்கம்

உலகில் வாழ்வதற்கும், இன்பங்கள் நுகர்வதற்கும், பெருமை, புகழ் அடைவதற்கும் மக்கள்மட்டும் தான் முயன்று பல வழிகளில் உழைத்துப் பணம் தேடவேண்டுமென்று நினைக்க வேண்டாம். நம்மை ஆளும் அரசாங்கமும் உலக அரசியல் அரங்கில் மதிப்புடன் திகழ நாட்டின் பொருளாதாரத்தில் கருத்துக்கொண்டு பல வழிகளில் பணமாக்கும் செயல் புரிய வேண்டியிருக்கிறது.

அரசாங்கத்திற்கும் கூடவா பணம் தேவை? அவர்கள் எவ்வளவு வேண்டுமானாலும் காகிதத்தில் நோட்டுகளை அச்சடிக்கலாம். உலோகங்களில் நாணயங்களை வார்க்கலாம் எனச் சிலர் நினைக்கக்கூடும். ஆனால், அவ்வாறு அவர்கள் செய்ய ஒண்ணாத நிலையில் அவ்வரசாங்கம் அமைத்துள்ள சட்டமே அவர்களைத் தடுத்து நிற்கிறது. அரசியலார் நோட்டுகளையும் நாணயங்களையும் அளவுக்கு மேல் வெளியிடுவதைச் செலாவணிச் சட்டம் கட்டுப் படுத்துகின்றது. ஆகவே, அரசாங்கத்தினர் செலாவணிச் சட்டப்படியே நோட்டுகளையும் நாணயங்களையும் வெளியிட்டுத் தங்கள் தேவைக்கு நாட்டு மக்களிடமிருந்தே பணம் ஈட்ட வகைதேட வேண்டியவர்களாகின்றனர். ஆனால் அவர்களுக்குப் பணமீட்டுதற்கு நம்மைப் போன்று சலியா உழைப்புத் தேவையில்லை. அவர்கள் வசூலிக்கும் வரிகளும், ஏற்படுத்தியுள்ள தபால், தந்தி போக்கு வரவு சாதனங்களும் அவர்களது பண

மாக்கும் செயலுக்குத் துணை செய்கின்றன. ஆகவே, அரசாங்கத்திற்குத் தேவைப்படும் பணத்திற்கும் நாட்டு மக்களே உழைக்க வேண்டியிருக்கின்றது. அரசாங்கம் திரட்டிய பணத்தை என்ன செய்கிறது? அது ஏன் கடன் வாங்குகிறது? என்பனவற்றைச் சிறிது ஆராய்வோம்.

குடும்பத்தினர்கள் வாழ்வதற்கும் இன்பம் நுகர்வதற்கும் பணம்தேட வேண்டிய பொறுப்பு எவ்வாறு குடும்பத் தந்தையையும் சார்ந்துள்ளதோ அது போன்று நாட்டு மக்களின் நலங்களைக் கவனிக்கவும் வசதியுடன் வாழச் செய்யவும் அந்நாட்டு அரசாங்கத்திற்குப் பணமாக்க வேண்டிய பொறுப்பு அமைந்து இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் பல வரிகளை விதித்துப் பணம் திரட்டுகிறது. அப் பணத்தைக் கொண்டு நாட்டு மக்கள் எல்லோருக்கும் பயன்படும் பொதுவான நன்மைகளைச் செய்கின்றது. உதாரணமாக, கல்வியளித்தல், சாலைகள் அமைத்தல், மக்கள் உடைமையைப் பாதுகாத்தல் முதலியவற்றைக் காணலாம். மேலும் பாசனத்திற்கான பெரிய அணைகளைக் கட்டும்போதும் தொழில் வளர்ச்சிக்கான மின்சார நிலையங்களை அமைக்கும் போதும் அரசாங்கத்திற்கு ஏராளமான பணம் தேவைப்படுகிறது. அப்போது அரசாங்கம் மக்களிடை கடன் பத்திரங்களை வழங்கிப் பணம் சேகரிக்கிறது. பின்னர் அத்திட்டங்களால் பல வசதிகளைப் பெற்றுப் படிப் படியாக மக்கள் செல்வ நிலையில் உயர்வடையும்போது அரசாங்கம் அதிக வரிகளை வசூலித்து ஈடு செய்கிறது.

"அரசாங்கம் ஏன் இவ்விதம் செய்ய வேண்டும்? மக்கள் மீது ஏன் அது அதிக வரிகளை விதிக்க

வேண்டும்? நாம் ஏன் அவ்வரிகளைக் கொடுக்க வேண்டும்?" என்று கேட்கலாம். முன்னர் எட்டாவது இயலில் கூறியபடி ஒவ்வொரு மனிதனுடைய செல்வத்தின் உயர்வு தாழ்வுகளுக்கு அவன் வாழும் நாட்டின் செல்வநிலையும், நாட்டின் செல்வத்தின் உயர்வு தாழ்வுகளுக்கு அங்கு வாழும் தனி மனிதனின் செல்வ நிலையும் ஒன்றுக்கொன்று ஓர் அளவு காரணமாயிருக்கின்றது. நம் நாட்டின் பொருளாதாரம் நாம் பெருமைப்படும் அளவிற்கு நன்னிலையில் அமைந்திருந்தால்தான், நம் நாடு அரசியல் உலகில் பிற நாடுகளால் மதிக்கப்பட்டுப் பெருமையுடன் நடத்தப்படும். ஆகவே, அரசாங்கத்திற்குத் துணையாக நின்று பல வழிகளில் மக்கள் சலியாது உழைத்துப் பணம் திரட்டவேண்டும். அரசாங்கமும் மக்களுக்குப் பல ஆக்க வேலைத் திட்டங்கள் வகுத்து நாட்டுமக்களின் செல்வநிலை உயர்வடையப் பாடுபடவேண்டும்.

அந்நிய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற நம் அரசாங்கம் ஆக்கவேலையில் தீவிரமுயற்சிகளை எடுத்து வருகிறது. நம் நாட்டு மக்களின் வறுமையைப்போக்க அரசாங்கம் தன் அறிவுத் திறனை எல்லாம் பயன் படுத்தி ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுத்து நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காகப் பல வகைத் தொழிற்சாலைகள், பாசனத்திட்டங்கள், சமூக நலத்திட்டங்கள் முதலியனவற்றை நிறைவேற்றி வருகிறது. இத்திட்டங்களால் நாட்டின் பொருளாதார நெருக்கடி குறையும். மக்கள் செல்வநிலை உயரும், நாட்டின் வறுமை நிலை ஒழியும், தொழில்கள் வளரும், உற்பத்தி பெருகும், வாணிபம் ஓங்கும்: இப்படிக் கூறிக்கொண்டே போகலாம், ஆனால்,

அரசாங்கத் திட்டங்களைப் பயன்படச் செய்யவும் நாட்டின் பொருளாதாரம் நன்னிலையடையவும் பொதுமக்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் தன் முயற்சியுடன் சலியாது உழைக்க வேண்டுமென்ற கொள்கை வீறிட்டுத் தோன்றுதல் வேண்டும்.

உழைத்துப் பெற்ற ஊதியத்தை உபயோகமற்ற செலவுகளைச் செய்யாது சேமித்து வைக்கவேண்டும். சேமித்து வைத்துள்ள ஒருவனைப் பார்த்துப் பொருமை கொள்ளாது. நாமும் அவனைப்போல் பணம் திரட்ட வேண்டுமென்ற அவாவுடன் திட்டமிட்டுச் செலவு செய்யவேண்டும். நாம் தேடிய ஒவ்வொரு காசையும் செலவிடும்போது செலவின் அவசியத்தைப் பலவிதங்களில் ஆராய்ந்து செலவிட வேண்டும். நாம் செலவிடும் ஒவ்வொரு சிறிய தொகையையும் எவ்வித உழைப்பால் நாம் அடைந்தோம் என்று எண்ணிப் பார்த்துச் செலவிட வேண்டும். இவைகளைக் கருத்திற் கொண்டு ஒவ்வொருவரும் பணம் ஈட்ட முயலவேண்டும். இம்முயற்சிகளே நமக்கும், நம் நாட்டிற்கும் பணமாக்கத்திற்கு மூலகாரணமாகும் என்பது திண்ணம்.

இதுகாறும் இச்சிறு நூல் வாயிலாகப் பணமாக்கலில் ஈடுபடுவதற்கான வழி வகைகளுள் சிலவற்றையும் பணத்தின் பண்புகளேயும் அறிந்துகொண்டீர்கள். எனவே, வருங்கால உலகப் பெரு மக்களாகத் திகழப்போகும் மாணவர்களாகிய நீங்கள் ஒவ்வொருவரும், உங்கள் நுண்ணறிவுகொண்டும் அறிஞர்கள் துணேகள்கொண்டும் பொருள்தேட முயலவேண்டும். நம் இந்தியா தேசம் பணப் பெருமையில் உயர்நிலே அடையவேண்டும். வருங்காலத்தில் நம் நாடு இன்றைய உலக அரங்கில் குபேர நாடு என்று பெயர் பெற்றுவரும் அமெரிக்க நாட்டிற்கும், முதலாளித்துவ நாடு, விஞ்ஞானிகள் நாடு எனப்படும் மேல்நாடுகளுக்கும் சமதர்ம நாடு என வழங்கிவரும் ரஷ்ய நாட்டிற்கும் மேலான ஓர் உயர் நிலேயை யடையச் செய்யவேண்டியது உங்களது கடமையாகும்.

முனேந்தால் முடியாதது இல்லே, 'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ' என்பது பட்டினத்தடிகளின் அருமை வாக்கு, பணத்தைத் தேடுங்கள். தேடி நீங்களும் துய்த்துப் பிறர்க்கும் ஈயுங்கள். 'செல்வத்தின் பயனே ஈதல்; துய்ப்பேம் எனினே தப்புந பலவே' என்னும் முன்னேர் கருத்தை மறவாதீர்கள்.

மேலும், கம்பன் செல்வமானது அற்பர்களே அரசனுக்கும், நாட்டை ஆளச் செய்யும், நலன்களே அனுபவிக்கச் செய்யும், நல்ல உணவுப் பொருள்

களைக்கொண்டு சேர்க்கும், தேவலோகத்திற்கும் செல்லுமாறு செய்யும், காரியங்கள் எல்லாவற்றையும் சரிவர முடித்துவைக்கும், பகைவர்களை வாடச் செய்யும். ஆகவே, செல்வத்தைவிட நுட்பமான செயல்களைச் செய்யவல்லது எதுவும் இவ்வுலகில் இல்லாமையால் அதனைக் கொள்ளுங்கள் என்னும் பொருள்படப் பாடிய,

"பூரியர் தமைவேந் தாக்கும் புவிபுரப் பிக்கும் துய்க்கும்
சீரிய உண்டி சேர்க்கும் தேவர்தம் உலகம் போக்கும்
காரியம் அனைத்தும் கூட்டும் கருதலர் தம்மை வாட்டும்
கூரிய இதன்மேல் இல்லை கொழும்பொனீர் கொண்மின்
[என்றார்.

இப் பாடலையும் மனத்தில் கொள்ளுங்கள்.

---

TAMIL NADU ARCHIVES
No. 109866
... MADRAS ...

1-X-64-L

2C

A
1015

191